Registered at t e G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily    தேசிய தினசரி

)பான் 389    தபாற் பெட்டி எண் 49

லர் 4    யாழப்பாணம்    பலவ    பங்குனி 10 ஆம் நாள் -    ஷவ்வால் 6    (23 3-62)    வெள்ளிக்கிழமை    இதழ் 41

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# பாடசாலைகளை மீண்டும் திறக்கவும்

## சுகாதார அதிகாரிகள் மந்திரிக்கு கோரிக்கை

### ரஷ்யாவிலிருந்து வாதநோய்தடுப்பு மருந்து

கொழும்பு, வியாழன்

இளம் பிள்ளை வாதத் தடுப்பு மருந்து இன்னும் சில தினங்களில் சோவியத் யூனியனிலிருந்து இலங்கை வந்து சேரவிருக்கிறது. குழந்தைகள் சுவைத்து சாப்பிடக்கூடிய வகையிலமைந்த இரண்டு லட்சம் 'டோஸ்' மருந்துகளை இங்கு அனுப்புவதாக, சோவியத் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு நேற்று தந்தி மூலம் அறிவித்திருந்தது.

இளம் பிள்ளை வாதத்தினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளை மூடிவிடும்படி கல்வி மந்திரி விடுத்த உததரவுக்கு சுகாதார இலாகா அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இளம் பிள்ளை வாதத் தடுப்பு நடவடிககைகளை அரசாங்கம் பாணந்துறை, ஜா-எலைப் பகுதிகளுக்கும் விஸ்தரித்துள்ளது.

இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து இன்னும் சில தினங்களில் சோவியத் யூனியனிலிருந்தும் இலங்கைக்கு வந்து சேரவிருக்கிறது.

இரண்டு லட்சம் 'டோஸ்' மருந்துகள் அனுப்புவதாக சோவியத் அரசாங்கம் நேற்று இலங்கை அரசாங்கத்துக்கு தந்தி மூலம் அறிவித்திருந்தது.

இந்த மருந்து குழந்தைகள் சுவைத்து சாப்பிடக்கூடிய வகையில் இனிப்பு போன்றிருக்குமாம்.

சோவியத் அரசாங்கத்தின் தந்தி கிடைத்ததைத் தொடர்ந்து இளம் பிள்ளை வாதத் தடுப்பு நடவடிக்கைகளை பாணந்துறை, ஜா-எலை பகுதிகளுக்கும் அரசாங்கம் விஸ்தரித்துள்ளது.

#### பாடசாலைகளை மூடியதற்கு ஆட்சேபம்

கொழும்பில் இளம் பிள்ளை வாதத்தினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளை மூடிவிடும்படி கல்வி மந்திரி விடுத்த உத்தரவுக்கு சுகாதார இலாகா உயர்தர அதிகாரிகளும் கொழும்பு மாநகர சபை சுகாதாரப் பகுதி அதிகாரிகளும் ஆட்சேபம் தெரிவித்தனர். கல்வி மந்திரியை இவர்கள் இன்று சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினர். பாடசாலைகளை மூடும்படி விடுக்கப்பட்ட உத்தரவை வாபஸ் பெறும்படி கல்வி மந்திரியை அவர்கள் வற்புறுத்தினர். பாடசாலைகளை மூடும்படி உத்தர விடுவதற்கு முன்னுல் தங்களைக் கலந்து ஆலோசனை செய்திருக்கலாமென அவர்கள் மந்திரியிடம் தெரிவித்தனர்.

#### நான்கு காரணங்கள்

பாடசாலைகள் மூடப்பட வேண்டியதில்லையென்பதற்கு அவர்கள் பின்வரும் நான்கு காரணங்களைத் தெரிவித்தனர்:-

1. பாடசாலைகளை மூடுவதற்கு விடுக்கப்பட்ட உத்தரவு மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

2. பாடசாலைகளை மூடியதால் பாடசாலைகளில் தங்கியிருந்து படித்த மாணவர்கள், இந்த நோய் பீடிக்கப்படாமலிருக்கும் கிராமப் புறப் பகுதிகளுக்கு இக்கிருமிகளைக் கொண்டு சென்று நோயைப் பரப்ப ஏதுவாகும்.

3. பாடசாலைகள் மூலம் நோய் தடுப்பு நடவடிக்கைகளைச் சுலபமாகச் செய்யக்கூடிய சுகாதார இலாகாவினதும் மநகர சபை சுகாதாரப் பகுதியினதும் திட்டங்கள் பாடசாலைகள் மூடப்பட்டதால் தடைபட்டுவிட்டன.

4. நோயினுல் பீடிக்கப்பட்ட குழந்தைகளில் 95 தசவிகிதத்தினர் ஐந்து வயதுக்கும் குறைந்தவர்களாகையால் பாடசாலைகளை மூடவேண்டிய அவசியமே இல்லை.

## வெளிநாட்டிலுள்ள இலங்கை முதலாளிகள் பணம் அனுப்பத் தடை?

கொழும்பு, வியாழன்

இலங்கையில் வர்த்தக ஸ்தாபனங்கள் வைத்துக் கொண்டு வெளிநாடுகளிலுள்ள முதலாளிமார்களுக்கு இலங்கையிலிருந்து அந்த ஸ்தாபனங்கள் இலாபப் பணத்தை அனுப்புவதற்குத் தடைசெய்யும் புதிய சட்டமொன்றை அரசாங்கம் கொண்டுவரவிருக்கிறது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக ஸ்தாபனங்களின் முதலாளிகளுக்கு அதிகமாகபணம் செல்வதாகவும் 1949—50-ம் ஆண்டில் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் ஸ்தாபனங்களிலிருந்து இலங்கைக்கு ஐந்து கோடி 88 லட்சம் ரூபாய் கிடைத்ததாகவும் அதே வருடத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக ஸ்தாபனங்களின் முதலாளிமார்களுக்கு 40கோடி ரூபாய்க்கு மேல் அனுப்பப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

முயற்சி செய்துவருகின்றனர்

## வைத்தீஸ்வரன் கோவில் திருவிழா முடிவுற்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த 20 நாட்களாக நடைபெற்றுவந்த வண்ணை வைத்தீஸவரன் கோவில் திருவிழா இன்னுடன் நிறைவுறுகிறது.

திருவிழா தொடங்கிய நாளிலிருந்து 'திருஞானசம்பந்த நாயனுரின் திவ்விய சரித்திரத்தை கதாப்பிரசங்கம் செய்துவந்த வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. ஆறுமுகத்தின் தொண்டைப் பாராட்டுமுகமாக இன்று ஒரு பாராட்டுவிழா நடைபெறும்.

## உப்பு தட்டுப்பாடு நீங்கும்

கொழும்பு, வியாழன்

இன்று நாட்டில் நிலவும் உப்புத் தட்டுப்பாடு விரைவில் நீங்கிவிடுமென்றும் கையிருப்பிலிருக்கும் உப்புடன் இறக்குமதியாகும். உப்பும் இப்பொழுதுள்ள தட்டுப்பாட்டை நீக்கிவிடுமென்று அரசாங்கம் இன்று விடுத்த ஒருஅறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## பத்திரிகையாளர் சங்கம் பாராட்டு

கொழும்பு, வியாழன்

அல்ஜீரிய யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

## திரு. சேனநாயகா நினைவு தினம்

கொழும்பு, வியாழன்

முன்னுள் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் பத்தாவது சிரார்த்ததினம் இன்று நாடு பூராவும் கொண்டாடப்பட்டது.

திரு. சேனநாயக்காவின் முழு உருவச்சிலையைத் தாங்கிய கார் முன் செல்ல 100 கார்களைக்கொண்ட ஊர்வலமொன்று கொட்டாஞ்சேனையிலுள்ள விகாரையொன்றிலிருந்து புறப்பட்டு பொத்தலை என்ற இடத்தை அடைந்தது. இதைத் தொடர்ந்து கொழும்பு நகரமண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு ஹென்றி அமரசூரியா தலைமைவகித்தார்.

## கிரிக்கட் போட்டி புள்ளிவிபரக் கூப்பன் (Score Sheet)

### மத்திய கல்லூரி

| | இன்னிங்ஸ் 1 | இன்னிங்ஸ் 2 |
|---|---|---|
| 1. ஆர். மகேந்திரன் | | |
| 2. எஸ். ஸ்ரீநிவாசன் | | |
| 3. எஸ். இராஜகிருஷ்ணன் | | |
| 4. ஜே. கனகநாயகம் | | |
| 5. வி. ரி. மகாலிங்கம் | | |
| 6. பி. தர்மராஜா | | |
| 7. எம். எஸ். எம். ஹரிவ் | | |
| 8. வி. சிவபோதிநாதன் | | |
| 9. வி. எஸ். ஆபிரகாம் | | |
| 10. பி. என். மனேகரன் | | |
| 11. பி. பி. பத்மதேவா | | |
| மொத்தம் | | |

### சென். ஜோன்ஸ் கல்லூரி

| | இன்னிங்ஸ் 1 | இன்னிங்ஸ் 2 |
|---|---|---|
| 1. டி. எம். செல்வநாயகம் | | |
| 2. டபிள்யு. ரி. ராஜ்குமார் | | |
| 3. டி. ஜே. என். செல்வத்துரை | | |
| 4. எம். தெய்வேந்திரா | | |
| 5. பி. கனகதுரை | | |
| 6. ஆர். என். சேதுகாவலர் | | |
| 7. ஆர். ஜே. ஜெகநாதன் | | |
| 8. ஆர். தம்பிஐயா | | |
| 9. டி. வைரவிப்பிள்ளை | | |
| 10. சி. ஆனந்தகிருஷ்ணன் | | |
| 11. பி. தவநாதன் | | |
| மொத்தம் | | |

# உங்கள் தினப்பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

பிலவஆண்டு பங்குனிமாதம் 10 ந்தேதி வெள்ளிக்கிழமை (23-3-62) மாலை 5-05 வரை துதியை. பின் திருதியை. இரவு 11-50வரை சித்திரை. பின் சுவாதி. மரணயோகம். சுபகரு மங்களை விலக்கி தெய்வ வழி பாட்டில் காலம் கழிக்குக.

## இன்று பிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு தேகாரோக்கியம், தெய்வ வழிபாடு, முயற்சிகளில் வெற்றி. குடும்பஆரோக்கியக்குறைவு, குடும்ப சச்சரவு, எதிரிகளால் தொல்லை, வர்த்தகத்தில் சிறப்பும் பணவரவும், எதிர்பாராத வகைகளில் இலாபம், உத்தியோகச் சிறப்பு, வித்தை மேன்மை, பெண்களது விருப்புக்கள்நிறைவேறி திருமண வைபவங்கள் நடத்தல் ஆதியன காணப்படுகின்றன. குடும்பத்தைப் பொறுத்தளவில் தெய்வ வழிபாடும், வேண்டுதல்களும் நன்மைபயக்கும்.

## நட்சத்திரப் பலன்

அச்சுவினி: நண்பர் கொண்டாட்டம், கடும் உழைப்பு.

பரணி: பிரயாணசுகம், அறிஞர் தொடர்பு.

கார்த்திகை: தருமச் செலவு, வைத்தியச் செலவுா

ரோகிணி: தாயாதிகளால் உதவி, தொழிற் சிறப்பு.

மிருகசீரிடம்: பிரயாணக் கஷ்டம், அலைச்சல்.

திருவாதிரை: தொழில்பிவிருத்தி, கடன் தொல்லை.

புனர்பூசம்: தொழில் அபிவிருத்தி, சுகம்.

பூசம்: கடும் உழைப்பு, தொழில் யோசனை.

ஆயிலியம்: தனதானிய சேர்க்கை, சுகம்.

மகம்: அலைச்சல்: சத்துருவால் கஷ்டம்.

பூரம்: கடன்வரவு, வழக்கு வெற்றி.

உத்தரம்: வீண்பகை, முதியோர் தொடர்பு.

அத்தம்: தொழில் நன்மை, உதவி.

சித்திரை: தொழில் மந்தம், அலைச்சல்.

சுவாதி: கடன்தொல்லைகுறைதல், சகோதரர் தொடர்பு.

விசாகம்: ஊழியர் உதவி, தனலாபம்.

அனுஷம்: அலைச்சல், சஞ்சலம்.

கேட்டை: தொழில்மேன்மை, மதிப்பு.

மூலம்: வீண்பகை, கடும் உழைப்பு.

பூராடம்: சுபசெய்தி, பெரியோர் நட்பு.

உத்தராடம்: சொத்துக்களால் பகை, கவலை.

திருவோணம்: வழக்கு வெற்றி, தொழில் நன்மை.

அவிட்டம்: பணமுடை, அலைச்சல்.

சதயம்: சுபசெய்தி, பண வரவு.

பூரட்டாதி: பழைய கடன் வரவு, தொழிற் சிறப்பு.

உத்தரட்டாதி: வீண்பகை, நிதானமில்லை.

ரேவதி: கடும்உழைப்பு, பண வரவு.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# ஆஸ்பத்திரிகளுக்கு பணம்ஒதுக்க திறைசேரி தாமதம்

## சுகாதார மந்திரி அறிவிப்பு

காலி, வியாழன்

எம். பி.க்களும் இலாகாத் தலைவர்கள் பலரும் காலி அரசாங்க ஆஸ்பத்திரியில் கூடிய மகாநாடு ஒன்றில் சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியாவும் கலந்துகொண்டார்.

நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கென வருடாந்தம் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கும்படி திறைசேரியிடம் தாம் கேட்டதாகவும், ஆனால் இன்னும் பல வருட காலத்துக்கு இந்தத் தொகை ஆஸ்பத்திரிகளுக்கு வழங்கப்படமாட்டாது எனத் தெரிகிறது எனவும் சுகாதார மந்திரி திரு ஜயசூரியா மகாநாட்டில் கூறினர்.

ஆஸ்பத்திரிகள் பலவற்றிலும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதை சுகாதார மந்திரியும் ஒப்புக்கொண்டார். ஆஸ்பத்திரிகளுக்குத் தண்ணீர் வசதிகளும் வடிகால்வாய்த் திட்டங்களும் தேவைப்படுகின்றன என்பதையும் திரு. ஜயசூரியா ஒப்புக்கொண்டார். ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கு எந்த ஒரு வகையாகவும் பண வசதி செய்ய வேண்டும் என திரு. ஜயசூரியா கூறினர்.

காலி ஆஸ்பத்திரிக்கெனத் தனிப்பட்ட குழாய் நீர் வசதியும் வடிகால்வாய்த் திட்டமும் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் எனக் காலி எம். பி. திரு. தஹநாயக்கா கூறினர்.

ஒவ்வொரு பெரிய ஆஸ்பத்திரிக்கும் தனிப்பட்ட தண்ணீர் குழாய் வசதிகள் அமைக்கப்படவேண்டும் என்பதை தமது அமைச்சு ஏற்றுக்கொள்கிறது எனச் சுகாதார மந்திரி கூறினர்.

காலி ஆஸ்பத்திரிக்கு நிரந்தரமான இரத்த வங்கி ஒன்றும் அமைக்கப்பட வேண்டும் எனக் காலி எம். பி. திரு. தஹநாயக்கா கேட்டுக்கொண்டார்.

# உப்புத்தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

கொழும்பு, வியாழன்

நாடு முழுவதிலும் இப்பொழுது உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கொழும்பு நகரத்தைவிட மாகாணங்களில் தான் உப்புத்தட்டுப்பாடு பெருமளவில் ஏற்பட்டுள்ளது. உப்பு இருந்தாலும் அவை கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. கறிஉப்புத் தட்டுப்பாட்டினல் பலர் இப்பொழுது மேசை உப்பு வாங்கி உபயோகிக்கின்றனர்.

நிலாவளி, புத்தளம் உப்பளங்களில் உள்ள உப்பு இப்பொழுது மாகாணங்களுக்கு அவசரஅவசரமாகஅனுப்பிவைக்கப்படுவதாக உப்பு கூட்டுஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் நிலைமை அபிவிருத்தியடைந்துவிடுமென்றும் அடுத்த மாதமுடிவில் நிலைமை பழைய நிலைக்கு வந்துவிடுமென்றும் அந்த அதிகாரி கூறினர்.

தென்னிந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்யப்பட்டு வருவதாகவும் ஆனல் தேவைத்குப் போதுமானதாக இல்லையென்றும் விரைவில் எகிப்திலிருந்து உப்பு இறக்குமதியாகுமென்றும் இதன் பின் உப்புத் தட்டுப்பாடு நீங்கிவிடுமென்றும் நம்பப் படுகிறது.

ஒருவாரத்துக்கு 1,200 தொன் உப்பு இலங்கைக்குத் தேவையாகவுள்ளது.

# ரூபாய் நோட்டு கடத்தல்: இந்திய உதவி கோரப்படுகிறது

கொழும்பு, வியாழன்

இலங்கையிலிருந்து ரூபாய் நோட்டுக்களைக் கள்ளத்தனமாகக் கடத்திச் செல்பவர்களைக்கண்டு பிடிப்பதற்கு இந்திய அரசாங்கத்திடம் இலங்கை அரசாங்கம் உதவி கோரியுள்ளது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ரூபாய் நோட்டுக்கள் கடத்திச் செல்லப்படுவதாக அரசாங்கத்துக்குப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து செலவாணிக் கட்டுப்பாட்டதிகாரிகளும் சுங்க அதிகாரிகளும் சமீபத்தில் பேச்சுவார்த்தை நடத்தியதையொட்டி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா செல்லும் பிரயாணிகளைக்வனமாகச் சோதனை செய்யவும் இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் பொருள்கள் அனுப்பப்படும் பணத்துக்கு பெறுமதிவாய்ந்தவைதானு என்பதைக் கவனிக்கவும் சுங்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## தடியால் தாக்குண்டு மரணம்

### ஒருவர் ஆஸ்பத்திரியில்

மாவிட்டபுரம், புதன்

உடுவிலில் நேற்று இரவு இருவருக்கிடையில் நடைபெற்ற கைகலப்பில் ஒருவர் ஸ்தலத்தில் மாண்டார். மற்றவர் பலத்த குத்துக்காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுவில், மல்வம் குறிச்சியைச்சேர்ந்த பொன்னர் இராசையா நேற்று இரவு கிணற்றடிக்குச் சென்றபொழுது நாகமுத்து மாணிக்கம் என்பவரும் கிணற்றடிக்குச் சென்றார் என்றும் இருவருக்கும் முதலில் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் கைகளால் அடிபட்டார்கள் என்றும் இதைத்தொடர்ந்து நாகமுத்து மாணிக்கம் தான் வைத்திருந்த கத்தியால் பொன்னன் இராசையாவின் வயிற்றில் குத்திவிட்டு ஓடிவிட்டார் என்றும் இராசையா அவரைத் துரத்திக்கொண்டுபோய் ஓர் தடியால் மாணிக்கத்தின் தலையில் அடித்தார் என்றும் கூறப்படுகிறது.

மாணிக்கத்தின் மரணம் குறித்து இன்று நண்பகல், மல்லாகம் நீதிபதி திரு.வெஸ்லி. டி. தாமோதரம் ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்தினர்.

காங்கேசன்துறை டி.எம்.ஓ திரு. எம். வேதாரணியம் பிரேத பரிசோதனைசெய்தார்.

நீதிபதி, விசாரணை முடிவில் பொலிசாரை மேற்கொண்டு புலன் விசாரிக்க உத்தரவிட்டு ஆஸ்பத்திரியில் இருக்கும் பொன்னர் இராசையாவை அடுத்தமாதம் 3-ம்திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டார்.

சுன்னகம் பொலிசார் மேற்கொண்டு புலன் விசாரணை நடாத்துகின்றனர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வெள்ளி 23-3-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 7-45 பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 பாகிஸ்தான் தின நிகழ்ச்சி.

இரவு 7-00 ஞானஞ்சலி, 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 இலட்சுமி நடராஜன்—பாட்டு, 10-15 பக்திப் பாடல்கள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 இசைக் கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 நாமகிரிப் பேட்டை கே. கிருஷ்ணன்—நாகஸ்வரம், 9-15 பலகணி, 9-30 மெல்லிசைக் கதம்பம், 9-45 இசைமாலை.

# சுகாதார சேவை நிர்வாகத்தில் சிறந்தவர்

கொழும்பு, வியாழன்

இலங்கையின் சுகாதார சேவை டைரக்டர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணரத்ன, உலக சுகாதாரசேவை நிர்வாகிகளுள் சிறந்த ஒருவர் எனக் கணிக்கப்பட்டுள்ளார்.

'ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் தற்கால அபிப்பிராயம்' என்ற, சமீபத்தில் கொலம்பியாவில் வெளியான புத்தகத்திலேயே டாக்டர் கருணரத்ன இவ்வாறு கணிக்கப்பட்டுள்ளார். கொலம்பியாவின் வைத்திய நிர்வாக ஆலோசகர் டாக்டர் கார்ல்டன் ஓவன் என்பவரால் இப்புத்தகம் வெளியிடப்பட்டது.

51 வயதுடைய சுகாதார சேவை டைரக்டர், உலக சுகாதார சேவை நிபுணர்கள் குழுவில் ஒரு அங்கத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியருக்கு பாராட்டு விழா

பருத்தித்துறை, செவ்வாய்

கரணவாய்வடக்கு சைவவித்தியாசாலையில் 40 ஆண்டுகள் தலைமை ஆசிரியராக கடமையாற்றி ஓய்வுபெறும் ஆசிரியர் பண்டிதர் சி. கந்தவனத்துக்கு பாடசாலையில் பாராட்டு விழாவொன்று நடைபெற்றது.

பண்டிதரின் ஆசிரியரான திரு. ச. செல்லையா உட்பட பலர் அன்னரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

திரு. தா. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழா முடிவில் தேநீர் விருந்துடன் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

இன்று முதல் மகத்தான ஆரம்பம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த

சிறந்த கலர் படம்!

பார்த்து பயன் அடையுங்கள்!



சித்திரா • அசரத்

கிருஷ்ணகுமாரி

நடித்த

ஜிம்போ

(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

மனோகரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30 க்கு

சிவாஜி கணேசன் - பத்மினி நடித்த

மரகதம்

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில் மாலை 4-15 க்கும்

NOTORIUS

(ஆங்கிலம்)

# அல்ஜீரியாவில் மீண்டும் பலாத்கார சம்பவங்கள்

## 20,000 அரசியல் கைதிகள் விடுதலை பெறுவர்

அல்ஜியர்ஸ், மார்ச் 22

அல்ஜீரிய சண்டை நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான இரண்டாவது நாளான நேற்று அல்ஜீரியாவில் ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ஸ்தாபனத்தினர் அல்ஜியர்ஸிலும் ஓரானிலும் தங்கள் பலாத்கார நடவடிக்கைகளைத் தீவிரமாக்கிக்கொண்டனர்.

ஓரானில் தீவிரவாதிகளை எதிர்த்து பாதுகாப்புப் படையினர் சுமார் இரண்டுமணி நேரம் துப்பாக்கிச்சண்டை நடத்தினர். இச்சண்டையில் ஆறு பிரஞ்சு பொலிஸாரும் ஆறு ஐரோப்பிய சிவிலியன்களும் மாண்டனர். மற்றும் பலர் காயமடைந்தனர்.

ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ஸ்தாபனத்தினர் தங்களுக்கெனத் தனியாக ஒரு ரேடியோ டிரான்ஸ்மீட்டர் வைத்து ஒலிபரப்பிக் கொண்டிருப்பதாகவும் ஆனால் இதைக் கைப்பற்ற பாதுகாப்புப்படையினர் செய்த முயற்சி பலிக்கவில்லையென்றும் தெரிய வருகிறது.

நேற்றைய சம்பவங்களில் அல்ஜியர்ஸில்பத்து அல்ஜீரியர்கள் கொல்லப்பட்டனர்.

அல்ஜியர்ஸிலும் ஓரானிலும் நடைபெற்ற சம்பவங்களைத் தவிர இதரபகுதிகளில் நேற்று அமைதி நிலவியது.

அல்ஜீரிய விடுதலைப்போராட்டம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு பிரான்ஸில் சிறைவைக்கப்பட்டுள்ள சுமார் 20,000 அல்ஜீரியர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை பிரஞ்சு அரசாங்கம் எடுத்துவருகிறது. ஒரு முகாமில் மட்டுமுள்ள நாலாயிரம் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்பட்டு அல்ஜீரியாவுக்குத் திரும்பவிருக்கின்றனர்.

அல்ஜீரிய ஒப்பந்தத்துக்கு பிரஞ்சுமக்களின் அங்கீகாரத்தைக்கோரி பிரான்ஸில் அடுத்தமாதம் 8-ம் திகதி ஜனவாக்குக் கணிப்பு நடைபெறவிருக்கிறது.

படைகுறைப்பு மகாநாடு

# பிரான்சும் கலந்துகொள்ள முயற்சிசெய்யவேண்டும்

## அமெரிக்கா, ரஷ்யாவுக்கு திரு. மேனன் யோசனை

ஜெனிவா, மார்ச் 22

ஜெனிவாவில் நடைபெறும் 17 நாடுகளின் படைகுறைப்பு மகாநாட்டில் கலந்துகொள்வதில்லையென்ற தனது தீர்மானத்தை மாற்றி மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு பிரான்ஸைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்ற இந்தியாவின் யோசனையை படை குறைப்பு மகாநாடு ஏற்றுக்கொண்டது.

இந்த மகாநாட்டில் பிரான்ஸைக் கலந்து கொள்ளச் செய்வதற்கு இந்த மகாநாட்டின் கூட்டுத் தலைவர்களான அமெரிக்காவும், சோவியத் யூனியனும் முயற்சி செய்ய வேண்டுமென்று இந்தியப் பிரதிநிதி திரு. மேனன் கேட்டுக்கொண்டார்.

அல்ஜீரியப் பிரச்சினை தீர்ந்துவிட்டதால் இந்த மகாநாட்டில் பிரான்ஸ் கலந்துகொள்ளலாமென்று திரு. மேனன் யோசனை தெரிவித்தார்.

### மேனன் டில்லி திரும்பினர்

ஜெனிவா மகாநாட்டில் இந்திய தலைமைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பாதுகாப்பு மந்திரி திரு. மேனன் நேற்று ஜெனிவாவிலிருந்து புதுடில்லிக்குப் பிரயாணமானர்.

மகாநாட்டின் முன்னேற்றம் பற்றி இப்பொழுது எதுவும் சொல்வதற்கில்லையென்றும் மகாநாட்டின் சூழ்நிலை கெடாமலிருக்க ஒவ்வொருவரும் முயற்சி செய்து வருகின்றனரென்றும் ஒரு தீர்வு காண்பதற்கு எல்லோரும் ஆர்வம் காட்டுகின்றனரென்றும் திரு. மேனன் நிருபர்களிடம் தெரிவித்தார்.

# தண்ணீர் பங்கீடு செய்யவேண்டி வரும்

## பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள வரட்சியே காரணம்

கொழும்பு, வியாழன்

நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள வரட்சி நீடிக்குமாயின் தண்ணீர் பங்கீடு செய்தே விநியோகிக்க வேண்டிவரும் என சமூக சேவை டைரக்டர் திரு. பி. டி. உடுவல தெரிவித்துள்ளார்.

தமது பகுதிகளில் எவ்வளவு தூரம் வரட்சி நிலவியுள்ளது என்பதை அறிந்து அந்தப் பகுதியிலுள்ள அரசாங்க அதிபர்களுக்கு இதுபற்றிய விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு காரியாதிகாரிகள் கோரப்பட்டுள்ளனர்.

பல பகுதிகளில் கடும் வரட்சி நிலவியுள்ளதாகவும், சில பகுதிகளில் கடந்த 48 மணி நேரமாக மழை பெய்ததாகவும் வரட்சி காரணமாக பல விவசாயப் பகுதிகளில் தண்ணீர் வற்றியதால் நெல் வயல்களுக்குப் போதிய தண்ணீர் பாய்ச்ச முடியாது போயிற்று என்றும் மக்கள் குடி தண்ணீர் பெறும் கிணறுகள் சில வற்றிவிட்டதாகவும் தமது இலாகாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக திரு. பி. டி. உடுவல தெரிவித்தார்.

'கடும் வரட்சி ஏற்படும் சமயத்தில் கிடைக்கும் தண்ணீரைப் பங்கீடு செய்தே இலாகா விநியோகித்து வருவது வழக்கம்' என திரு. உடுவல மேலும் தெரிவித்தார்.

## விடுதலை வீரர்களுக்கு வரவேற்பு

ரபாட், மார்ச் 22

அல்ஜீரிய விடுதலைப் போராட்டம் காரணமாக காவலில் வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்ட முகம்மது பென்பெல்லாவும் மற்றும் நால்வரும் விடுதலைசெய்யப்பெற்று நேற்று கஸாபிளங்காவுக்கு வந்துசேர்ந்தபொழுது அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பெற்றது.

அல்ஜீரிய தேசிய பிரதம மந்திரி பென்கெடாவுக்கும் வரவேற்பளிக்கப்பட்டது. மொரோக்கோ மன்னர் சஹனும் மற்றும் பல அதிகாரிகளும் விடுதலை வீரர்களை நகர வாயிலில் வரவேற்றனர்.

# மேற்கு இரியான் விவகாரம்

## பேச்சுவார்த்தை ஆரம்பம்

வாஷிங்டன், மார்ச் 22

மேற்கு இரியான் விவகாரம் சம்பந்தமாக இந்தோனேஷியாவுக்கும் டச்சு அரசாங்கத்துக்குமிடையில் நேற்று வாஷிங்டனில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. இப்பேச்சுவார்த்தைகளில் அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதி திரு. எல்ஸ்வொர்த்பங்கர் மத்தியஸ்தராகக் கலந்து கொண்டார்.

முறையான பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரிப்பதுபற்றி நேற்றைய பேச்சுவார்த்தைகள் அமைந்ததென அறியப்படுகிறது.

# ஆர்ஜன்டைனவில் வேலைநிறுத்தம்

புவனஸ் அயர்ஸ், மார்ச் 22

டாக்டர் பேரோனின் ஆட்சி 1955-ம் ஆண்டில் இராணுவத்தினால் கவிழ்க்கப்பட்டபின் ஆர்ஜன்டைனவில் இதுவரை தோன்ருத பெரும் அரசியல் நெருக்கடி இப்பொழுது தோன்றியிருப்பதாகக் கருதப்படுகிறது.

பொதுத் தேர்தலில் பெரும் வெற்றி யீட்டிய டாக்டர் பெரோனின் ஆதரவாளர்கள் ஆட்சிக்கு வருவதைத் தடை செய்யும் நடவடிக்கைகளை எதிர்க்குமுகமாக இருபது லட்சம் தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கங்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்கின்றன.

இதேசமயம் ஆர்ஜன்டைனவில் கலப்பு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி பிரண்டிஸி முயற்சிசெய்து வருகிருர்.

# பிரிட்டன் செல்லும் இரு இலங்கையர்

கொழும்பு, வியாழன்

கொழும்புத்திட்டதின் நுண்தொழில் காப்பரேஷனின் கீழ் பயிற்சி பெற மேலும் இரு இலங்கையர் பிரிட்டனுக்குப் பிரயாணமாகின்றனர்.

திரு. பி. பி. ஜெயவிக்கிரம, தபால் காரியாலய பொறியியல் இலாகாவின் தொலைபேசித் தொடர்பு பொறியாளர், விமான மூலம் நேற்று பிரயாணமானர்.

திரு. ஜெயவிக்கிரம இலங்கையில் கேபிள்களைப் பராமரிப்பதில் பொறுப் பேற்றுள்ளார். பிரிட்டனில் 6 மாத கால பயிற்சியில் வானொலித் தொடர்பு, மேல்தொடர்புகள், அமைப்புகள், தொலைபேசி தொடர்புச் சேவையில் உட்பட்டவைகளில் விசேஷ பயிற்சி பெறுவார்.

டாக்டர்எம்.எஸ். நேசராசா, இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவப் பகுதியில் உடற்கூறு நூல் அறிவுரையாளர், இன்று பிரயாணமானர். இவர் பேமிஹாம் இராணி எலிஸபெத் ஆஸ்பத்திரியில் இருதய-துரையீரல் உடல் உறுப்புக்களைப் பற்றி இருவருட பயிற்சி பெறுவார்.

ஜெனிவா, மார்ச் 22

சமீபத்தில் விடுதலையடைந்த அல்ஜீரிய விடுதலை இயக்க வீரர் முகமதுபென்பெல்லாவும் அவருடன் விடுதலையடைந்த மற்றும் நால்வரும் அரபு நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து ஐந்து வருட சிறையனுபவங்கள் பற்றி எடுத்துக் கூறவிருக்கின்றனர்.

# தேயிலை, ரப்பர், தெங்குப் பொருள் ஏற்றுமதி அதிகரிப்பு

கொழும்பு, வியாழன்

இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப்பொருள்களான தேயிலை, ரப்பர், தெங்குப்பொருள்கள் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் இவ்வருடம் பெருமளவில் ஏற்றுமதியாகுமென ஏற்றுமதிப்பகுதி அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

தேயிலை, ரப்பர், தெங்குப் பொருள்களின் ஏற்றுமதி அடுத்தவருடத்தில் இன்னும் அதிகரிக்கலாமென மதிப்பிடப்படுகிறது. அரசாங்கத்தின் புனர்நடுகைத் திட்டத்தினுல் உற்பத்தி அதிகரித்திருப்பதுதான் ஏற்றுமதி அதிகரிப்புக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இவ்வருடத்தில் 4,25,000 ருத்தல்தேயிலையையும் 100,000 தொன் ரப்பரையும் இலங்கை ஏற்றுமதிசெய்யுமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1,371,400,000 தேங்காய்களுக்கு ஈடான தெங்குப்பொருள்கள் ஏற்றுமதியாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்றவருடத்தில் உற்பத்தியான 44,65,529,62 ருத்தல் தேயிலையில் 41,71,631,49 ருத்தல் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. மிகுதி உள்நாட்டிலேயே விற்பனையாயின.

சென்ற வருடத்தில் 95,792 தொன் ரப்பர் உற்பத்திசெய்யப்பட்டது. இதில் 94,842 தொன் ஏற்றுமதிசெய்யப்பட்டது.

இந்த நிதிவருடத்தில் 1,000,000 அந்தர் கொப்பராவையும் 1,900,000 அந்தர் தெங்காயெண்ணையையும் 1,000,000 அந்தர் தேங்காய்த் துருவலையும் இலங்கை ஏற்றுமதி செய்யுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

# விமானப்படை ஆதரவு

புவனஸ்அயர்ஸ், மார்ச்22

ஆர்ஜன்டைன ஜனாதிபதி திரு. பிரண்டிஸி பதவியிலிருந்து விலகவேண்டுமென்று ஆர்ஜன்டைன ராணுவகேணல்கள் சிலரும் கடற்படை அதிகாரிகள் சிலரும் கோரியுள்ளனர். ஆனல் விமானப்படையினரும் பெரும்பாலான ராணுவத்தினரும் திரு. பிராண்டிஸியை ஆதரிக்கின்றனர்.

# அணு ஆயுத சோதனைத்தடை

## பேச்சு வார்த்தை ஆரம்பம்

ஜெனிவா, மார்ச் 22

அணு ஆயுதசோதனைத்தடை ஒப்பந்தம் பற்றி அமெரிக்க, பிரிட்டிஷ், சோவியத் பிரதிநிதிகள் நேற்று இங்கு மீண்டும் பேச்சு வார்த்தை ஆரம்பித்தனர். படைகுறைப்பு மகாநாட்டின் ஒரு துணைக் கமிட்டி என்ற முறையில் இவர்களின் பேச்சு வார்த்தைகள் நேற்று ஆரம்பமாயின இன்றும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும். இப்பேச்சுவார்த்தைகளின்போக்கு பற்றி படை குறைப்பு மகாநாட்டுக்கு இக் கமிட்டி நாளை ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்.

# 7 பிள்ளைகளின் தாய் தற்கொலை

இரத்தினபுரி, புதன்

அயர்கமை என்னுமிடத்தைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தாயான எம். சோபிநோனு என்னும் பெண்மணி அசிட் திரவம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

சோபிநோனுவின் கணவர் மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் காலமானர்.

கணவன் இறந்தபின் இனியும் இந்த உலகில் வாழ்வதற்கு விரும்பவில்லையாதலால் தமது வாழ்வை முடித்துக் கொள்வதாக சோபிநானு ஒரு கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

# லஞ்சக்கமிட்டி விசாரணைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

மோட்டார் கமிஷனர் இலாகாவிலுள்ள லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் பொருட்டு, தெரிவு செய்யப்பட்டமூவர் கமிட்டியின் தலைவரான தொழில் தேசிய சேவைகள் உதவி மந்திரி திரு. யு.பி. வீரசேகரா சுகவீனமுற்றதால் விசாரணைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# உப்பு தட்டுப்பாட்டுக்கு கடவுளே பொறுப்பு!

நாகொடை, வியாழன்

இறைவன் கோபித்துக் கொண்டேயிருக்கிருர் என இங்குள்ள சிலர் அசையாத நம்பிக்கைகொண்டுள்ளார்கள். தமது வாழ்வில் எக்காலமும் உப்புக்கு இதுபோன்று தட்டுப்பாடு ஏற்படவில்லையாம். எனவேதான் அவர்கள் இவ்விதம் முடிவாக எண்ணியுள்ளார்கள்.

இங்கு உப்புக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இங்குள்ள மக்கள் உப்பில்லாமலேயே உணவு உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருக்கின்றனர். சிலகடைகளில் உப்பு விற்பனை செய்யப்பட்டாலும் இது சாதாரண மக்களின் கைக்கு எட்டாத வகையில் இருக்கிறது. வழக்கமான விலையிலும் பார்க்க அதிக விலையில் விற்கப்படுவதே இதற்குக் காரணம்.


## பிரதேச கலை மன்றம்

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்திலுள்ள் நாடக சபைகள், இசைக் கல்லூரிகள், நடனக் கல்லூரிகள் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறுவதற்குப் பிரதேசக் கலை மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும். இப்படிப் பதிவு செய்ய விரும்பும் சபைகளும் கல்லூரிகளும் மனுப்பத்திரங்களை 20-4-62க்குமுன் அனுப்பிவைக்கவும். மனுப்பத்திரங்களில் பூரண விபரங்களையும் கொடுக்கவும்.

யாழ்ப்பாணப் பிரதேச நாடகப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் சபைகள் (amateurs) 20-4-62க்கு முன் மனுச் செய்யவும்.

இங்ஙனம்,
ச. அம்பிகைபாகன்,
காரியதரிசி,
பிரதேச கலைமன்றம்.

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
20-3-62.

மணி வாக்கு

'செல்வம் நிறைந்தபோது பெருமையும், அதுகுறைந்த போது சோர்வும் கொள்ளாதவனிடத்தில், செல்வம் அழிந்தாலும் சிறப்பு அழியாது.'


ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
பங்குனி மீ 10 உ. (23-3-62)


## பயங்கர நோய்

இளம் பிள்ளை வாத நோய் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பரவி வருவதாகவும், 137 பேர் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாயும் சுகாதார இலாகா தெரிவித்திருக்கின்றது. ஜனவரி மாதத்திலிருந்து இந்நோய் அதிகமாகப் பரவிவருகின்றது. இதனால் இலங்கையிலுள்ள பிற இடங்களும் பாதிக்கப்படக் கூடுமெனச் சுகாதாரப் பகுதியினர் கருதி நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மலேரியா போன்ற தொற்று நோய்களைச் சகித்துக்கொள்ளும் வன்மையும் மனப் பக்குவமும் மக்களுக்கு இப்போது உண்டு. ஆனால், இளம்பிள்ளை வாத நோய் இருந்தாற்போலிருந்து தோன்றி உயிருக்கு ஆபத்து விளைக்கும்போது மக்களிடையே பீதி ஏற்பட்டு அவர்கள் சகிப்புத் தன்மையையே இழந்துவிடுகின்றனர்.

இளம் பிள்ளை வாத நோய் குழந்தைகளையே பெரும்பாலும் பிடித்துக் கொள்வதால் அரசினர் மிகுந்த பொறுப்புடன் நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மேர்கொள்ள வேண்டியவர்களாகின்றனர். நாட்டின் செல்வமான குழந்தைகளை இந்நோய் பீடித்து அவர்களை நடக்க முடியாமல் முடமாக்கிவிடுவதால் இந்நோய் எவ்வளவு பயங்கரமானதென்பதை உணர்ந்துகொள்ளலாம். ஆகவேதான், அரசாங்கம் வெளி நாடுகளை அணுகி நோயைத் தடுப்பதற்கான மருந்துகளை உடனே பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இப்படி வெளி நாடுகளின் உதவியைப் பெறுவது கௌரவக்குறைவென எண்ணுவதற்கே இடமில்லை. அவசியமற்ற சில காரியங்களுக்காக விமானங்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் அரசாங்கம் இந்நோயைத் தடுப்பதற்கான உதவிகளைப் பெறுவதற்காக உலகின் எந்தப் பகுதிக்கும் விமானங்களை அனுப்பத் தயங்கவே கூடாது. இப்பணியைக் கருணையளிக்கும் ஒரு கைங்கரியமாக அரசினர் கருதவேண்டுமென்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

இந்நோய் நாட்டில் பரவாது தடுப்பதற்கு சுகாதார முறைகளை அனுஷ்டிப்பது மிக அவசியமாகும். உணவுப் பண்டங்களில் ஈக்கள் மொய்க்காதவாறு பார்த்துக்கொள்வதுடன் கொதித்து ஆறிய நீரையே உட்கொள்ளவும் வேண்டும். பாலையும் நன்றாகக் காய்ச்சிய பின்னரே பருக வேண்டும் அத்துடன் வீடும் அதன் சுற்றுடலும் துப்புரவாக இருத்தல் அவசியமாகும்.

காய்ச்சல் கண்டவுடன் மிக எச்சரிக்கையோடு இருப்பதுடன் இயன்ற வரை மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள இடங்களை அணுகாதிருத்தல் வேண்டும்.

இளம்பிள்ளை வாத நோய் பரவுவதற்கு வீதிகளிலும் தெருவோரங்களிலும்விற்பனையாகும் தின்பண்டங்களும் பட்சணவகைகளும் முக்கிய காரணமெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுகாதார முறைகளை அனுஷ்டியாது தயார் செய்யப்படும் 'ஐஸ்கிறீம்' இந்நோய் பரவுவதற்குக் காரணமாய் இருப்பதால் வீதிகளிலும் பள்ளிக்கூடங்களுக்கு அருகிலும் ஐஸ்கிறீம் விற்பனை செய்வதைத் தடை செய்யுமாறு யாழ்ப்பாண மேயர் சுகாதார அதிகாரிக்குக் கட்டளையிட்டிருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். இவ்விஷயத்தில் சுகாதார பரிசோதகர்கள் கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டுமென்பதை இங்கு வற்புறுத்த விரும்புகின்றோம்.

தொற்று நோய்கள் வராமல் தடுப்பதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமென்பதை அனைவரும் அறிவார்கள். எனவே, பொது மக்கள் சுகாதாரப் பகுதியினருடன் ஒத்துழைத்து இந்நோய் பரவாதிருப்பதற்குத் தம்மாலான சகல உதவிகளையும் செய்வார்கள் என நம்புகின்றோம்.

புதுடில்லி கடிதம்

# நேருவின் புதியமந்திரிசபை

## காங்கிரஸ் திரட்டும் அறிக்கை

### கசப்பான தேர்தல் நினைவுகள்

### வெட்டுக்கிளிகள் படையெடுப்பு!

— ஈழநாடு நிருபர் டி.சர்க்கார் —

புதுடில்லி, மார்ச் 22

பழைய மந்திரிகளிற் பெரும்பாலோரும் மந்திரி பதவியில் அமர்த்தப்படுவராகையால் அமைச்சுக்களின் பொறுப்பை அவர்களது கையிலிருந்து மாற்றமுடியாதிருக்கின்றது. தேர்தலில் ஏற்பட்ட தோல்வி காரணமாக ஒரு மந்திரியினுடைய ஸ்தானமும் 2 உதவி மந்திரிகளுடைய ஸ்தானங்களும் நிரப்பப்படவேண்டியிருக்கின்றன: பிரதிநிதித்துவம் பெருத நேருஜியின் புதிய மந்திரிசபையங்கத்தவர்கள்முதலாம் வாரமளவில் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வர் என நம்பப்படுகிறது. மந்திரி சபை அங்கத்தவர்கள் தொகை 12லிருந்து 15 ஆக அதிகரிக்கப்படவிருக்கிறது. மந்திரி சபையில் இப்போது 12 மந்திரிமாரும் 35 உதவிமந்திரிமாரும் இருக்கிறார்கள். மாகாணங்களில் ஒரிஸாவும் ஆந்திராவும் என்றாலும் மந்திரிகள் சபையில் இடம்பெறும் என நம்பலாம்.

### போட்டியும் பூசலும்

காங்கிரஸின் உயர் அதிகாரி மூன்றாவது பொதுத் தேர்தல்பற்றிய விபரங்களைக் கன்கெடுத்து வருகிறது. ஒவ்வொருபிரதேசத்திலும் எதிர்க்கட்சியினர் பலம்உட்படப் பல விபரங்களையும் கொண்ட அறிக்கைகள் சேர்க்கப்படுகின்றன. காங்கிரஸ் கட்சியினருக்கிடையிலேயே உள்ள பேதங்களினாலேயே காங்கிரஸ் கட்சியினர் பலர் தேர்தலில் தோல்வி கண்டனர் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. காங்கிரஸ் அபேட்சகர்களுக்கிடையே உள்ளபேதமும் துவேஷங்களும் தேர்தல் முடிந்தபின்னர் கூடத் தீர்ந்துவிடவில்லை. காங்கிரஸ் அரசாங்கத்தில் உயர் பதவி ஏற்றுக்கொள்வதில்அங்கத்தவர்களிடையே போட்டியும் பூசலும் இருந்துவருகிறது. போட்டியையும் பூசல்களையும் குறைக்கும் நோக்கத்துடன் சில மாகாணங்களிலுள்ள மந்திரிசபைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. உத்தர பிரதேசத்தில் 42 அங்கத்தவர்களும் மேற்கு வங்காளத்தில் 37 அங்கத்தவதர்களும் மந்திரி சபைகளில் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி தன்னிடம் காணப்படும் பிளவுகளுக்கு வெகுவிரைவில் பரிகாரம் தேடவேண்டியது அவசியம்.

### வெட்டுக்கிளிகள் படையெடுப்பு

ஜூலை, அக்டோபர் மாதங்களில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின்மீது பெருந்தொகையான வெட்டுக்கிளிகள் படையெடுக்கலாம் என இரு நாட்டிலுள்ள நிபுணர்களும் கருதுகிறார்கள். இரு நாடுகளிலுள்ள தொழில்நுட்ப வல்லுனர்களும் வெட்டுக்கிளி படையெடுக்கும் காலத்தில் மாதமொருமுறைகூடி, பிரச்சினைக்குப் பரிகாரம் தேடும்வழிபற்றி ஆலோசிப்பதெனத் தீர்மானம் செய்துள்ளனர்.

எதிர்பாராதவிதமாகச் சில காலத்துக்கு முன்னர் பஞ்சாப் மீது வெட்டுக்கிளி பெருந்தொகையில் படைபெடுத்ததாம். இதனால் பெருந்தொகையான பயிர் சேதமடைந்தது. இந்த வருடத்தில் வெட்டுக்கிளிப் படையெடுப்பால் இந்தியா, பாகிஸ்தானுக்கு அதிக தீங்கு விளையலாம் என நிபுணர்கள் நம்புகிறார்கள்.

எல்லைப்புறங்களில் வெட்டுக்கிளி தடுப்பு முகாம்கள், தடுப்பு சாதனங்களை அதிகரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கசப்பான நினைவுகள்

அநேகமான பொதுத்தேர்தல்கள் போலவே, இந்தியாவின் மூன்றாவது பொதுத்தேர்தல் ஒரு சில கசப்பான நினைவுகளை விட்டுச்சென்றுள்ளது. பிரசாரங்களில் கடும்மொழியினாலும், காரசார தாக்குதல்களினாலும், தனிப்பட்டவர்களதும், கட்சிகளினதும் நேர்மை தூற்றப்பட்டது. தனிப்பட்டவர்களிடையே எத்தனைபொறாமையும், துவேஷமும் இருக்கிறதென்பதை தேர்தல்காலத்தில் காணமுடிந்தது. ஒரு சிலதேர்தல் சுவரொட்டிகளிலிருந்து மிகவும் கீழ்த்தரமான முறையில் தேர்தல் பிரசாரம் செய்யப்பட்டதை அறியமுடிகிறது என திரு. நேரு குறிப்பிட்டார். எதிர்பார்த்ததிலும் மோசமான அளவுக்கு அபேட்சகர்களிடையே துவேஷம் காணப்பட்டது. வருங்காலத்தில் கண்ணியமான முறையில் தேர்தல் பிரசாரங்கள் நடைபெறுவதற்கு இந்திய அரசாங்கம் மேலும் ஒழுங்குகளைச்செய்யும். தேர்தல் சுவரொட்டிகளை ஒவ்வொரு கட்சியினரும் தேர்தல் கமிஷனிடமோ அல்லது வேறு எந்த உயர்சபையிடமோ அனுப்பிவைத்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டபின்னரே பாவிக்க ஒழுங்குகள் செய்யப்படும்.

### திருப்பதிக்கோவில் வருமானம்

திருப்பதி வெங்கடேஸ்வரப் பெருமான் கோவிலுக்கு வருடமொன்றுக்கு 20 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. 1961—62 வரை 12 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்தது. இதற்கு முந்திய வருடத்தில் 10 லட்சம் ரூபாய் கிடைத்தது. கோவிலின் தேவஸ்தானம் - போக்குவரத்தினால் பெறப்படும் வருவாயும் அதிகரித்துவருகிறது. 1961—62ல் 46 லட்சமும், அதற்கு முந்திய வருடத்தில் 38 லட்ச ரூபாயும் போக்குவரத்து சாதனங்களால் இங்கு வருமானமாகப் பெறப்பட்டன.

# 5 வருட 'பாஸ்போர்ட்' இனி கிடையாது!

கொழும்பு, வியாழன்

வெளிநாட்டுக்குப் பிரயாணம் செய்ய 'பாஸ்போர்ட்' கோருபவர்களுக்கு இனி ஒரே தடவை சென்று திரும்புவதற்கு மட்டுமே'பாஸ்போர்ட்' வழங்கப்படும். இதுவரை இருந்துவந்ததுபோல் ஐந்து வருடங்களுக்குச் செல்லுபடியாகக் கூடிய 'பாஸ்போர்ட்' இனி வழங்கப் படமாட்டாது.

காலாவதியாகக் கூடிய இலங்கை 'பாஸ்போர்ட்' வைத்திருப்பவர்களின் 'பாஸ்போர்ட்டுகள்' இனி பிரயாணம் செய்து திரும்புவதற்குமட்டுமே புதுப்பித்துக் கொடுக்கப்படும். முன்னர் போல் மீண்டும் ஐந்து வருடத்துக்கு செல்லுபடியாகக் கூடியவகையில் புதுப்பித்துக் கொடக்கப் படமாட்டாது.

வெளிநாடு சென்று திரும்பியதும் 'பாஸ்போர்டை' சமர்பித்து விடவேண்டியதில்லை. அவசியமேற்பட்டால் 'மற்றொரு பிராணத்துக்குச் செல்லுபடியாகும்' என ,புதிய அனுமதி பெற்றுக்கொண்டு பிரயாணம் செய்ய முடியும்.

## நாட்டியப்போட்டி இன்று நடைபெறும்

கொழும்பு, வியாழன்

சப்ரகமுவ மாகாண நாட்டியப் போட்டிகள் நாளை இரத்தினபுரி ஸ்ரீவள்ளி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கலாபவனம் ஒழுங்கு செய்திருக்கும் இந்த நாட்டியப் போட்டிகளில் பல பாடசாலைகளைச் சேர்ந்த 400 மாணவர்கள் கலந்து கொள்கின்றனர்.

## மீனாட்சிசுந்தரனார் அமெரிக்கா பயணம்

சென்னை, மார்ச் 22

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் திரு. டி. பி. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அமெரிக்காவுக்குப் பிரயாணமானார். அங்கு அவர் 7 வாரங்கள் தங்குவார்.

சிக்காகோ பல்கலைக்கழகத்தில் அவர் மொழி வாரி மாகாணங்கள் பற்றி விரிவுரைகள் நிகழ்த்துவார். அத்துடன் தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் அவர் 10 உரைகள் நிகழ்த்துவார்.

## ஈச்மனின் அப்பீல் விசாரணை

### இன்று ஆரம்பம்

இஸ்ரேல், மார்ச் 22

லட்சக்கணக்கான யூதர்களைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட ஈச்மனின் அப்பீல் விசாரணை' இன்று இஸ்ரேல் உயர்தர நீதிமன்றத்தில் ஆரம்பமாகியது.

ஈச்மனின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது, சென்ற வருடம் டிசம்பர் மாதம் ஜெருசலம் நீதிமன்றம் ஈச்மனுக்கு மரணதண்டனை விதித்தது.

## வெளிமண்டல ஆராய்ச்சி

நியுயோர்க், மார்ச் 22

வெளி மண்டலம் சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்த, அமெரிக்கா சோவியத் நிபுணர்கள் எதிர் வரும் செவ்வாய்க் கிழமை நியுயோர்க்கில் கூடவிருக்கிறார்கள்.

## தனி நபர் சுதந்திரம்

### ராஜாஜி விளக்கம்

சென்னை, மார்ச் 22

நவீன முன்னேற்றத்தினால் சிக்கல்கள் ஏற்பட்டுள்ள சூழ்நிலையிலும், தனி நபர் சுதந்திரம் அடகு வைக்கப்படுவதையும். விலைகூறப்படுவதையும், அழிக்கப்படுவதையும் தடுத்து நிறுத்தி, அதைப்பாதுகாப்பது தான் சுதந்திரக் கட்சியின் லட்சியம் என்று ராஜாஜி ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

சமுகத்திலுள்ள அனைவரும் தங்குதடையற்ற முறையில்அபிவிருத்தி அடையவேண்டுமெனில், அந்தச் சமுகத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்குதடையற்ற அபிவிருத்தி அடைந்திருக்க வேண்டும் என்று பொருள்பட, கார்ல்மாக்ஸ் கூறியிருப்பதை அவர் அந்தக் கட்டுரையில் மேற்கோள் காட்டியிருக்கிறார். அதைத் தொடர்ந்து அவர் எழுதுவதாவது:

தற்போது கம்யூனிஸ்ட்கள் கையாளும் மார்க்கங்கள் அதற்கு நேர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன. அதாவது தனிநபர்உரிமைகள்; கட்சியாலும், அரசாங்கத்தாலும், அதிகாரிகளாலும் ஈவு இரக்கமற்ற முறையில் அடியோடு ஒடுக்கப்படுகின்றன. இத்தனைக்கும் கம்யூனிஸ்டுகள் கையாளும் மார்க்கங்கள்கார்ல்மாக்ஸின் இந்த போதனையின்படி ஏற்பட்டவைகளே"

'சுயபாரதீனநிலைமை' என்ற வார்த்தையை மாக்ஸ்கையாண்டுள்ளதை எடுத்துக்காட்டி அதைப்பின்வருமாறு ராஜாஜி விளக்கியுள்ளார்:-

மனிதர்கள் தங்கள் இயல்பான சுபாவங்களைப் பின்பற்ற முடியாத நிலைமையே அது குறிக்கிறது. அதாவது ஆத்ம திருப்திக்காகவன்றி கேவலம் உயிர் வாழ்வதற்காக உழைத்தாகவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகும் நிலைமையது. சொல்லப்போனால் மனிதன் தன்னைத்தானே விலைகூறும் நிலைமை.

மார்க்கெட் வர்த்தக பொருளாதாரத்துக்குப் பதிலாக அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளையும் ஆதிக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்பதே. மாக்ஸின் சித்தாந்தப் படியுள்ள சோஷலிஸ்ட் கொள்கை. மார்க்கெட் வர்த்தக, பொருளாதார அமைப்பு'மேலே கூறப்பட்டுள்ள "சுய பாரதீன நிலைமையை" அகற்றவில்லை. கம்யூனிஸ்ட் நாடுகளில் தற்போது காணப்படும் நிலைமை அதற்கு நேர்மாறாக உள்ளது. அரசியல் ஜனநாயகத்துடன் கூடிய திட்டமிடப்படாத கலப்பு பொருளாதார அமைப்பில் இருப்பதைவிட, திட்டமிட்டுள்ள சோஷலிசப் பொருளாதார அமைப்பில்தான் 'உழைப்பாளி" "சுயபாரதீனத்துக்கு" அதிகமாக ஆளாகக்கூடிய நிலைமையிருக்கிறது.

அரசாங்கம் ஒரு அரசியல் கட்சியின் பூரணபிடியில்சிக்கிக் கொண்டும் அந்தக் கட்சி அரசாங்கத்தின் வசதிகளைத் தன்னுடைய ஆட்சி நீடிப்பதற்காக உபயோகித்தும் வருகிற நிலைமையில்,தனிமனிதனின் நிலைமை அடிமையின் நிலைமைக்குச் சமமாகிவிடுகிறது.

இந்தச் சூழ்நிலையில் அரசியலைவிட, பொருளாதாரம் முக்கியமென்று காரணம் சொல்லிக்கொண்டு, அரசாங்கத்தின் சார்புள்ள சோஷலிஸ வெறி பிடித்த தலைவர்களை ஆதரிக்கும் யாரும், இந்த "சுயபாரதீன" கொடுமைக்கு உடந்தையாக இருப்பவர்களே.

தனிநபர் உரிமையென்ற ஜ்வாலை அணையாமற் பாதுகாக்கவேண்டுமென்பதே காந்திஜியின்விருப்பமென்றும்,காங்கிரஸ் கட்சியிலுள்ள அரசாங்க சோஷலிஸ்டுகள் தெரிந்தோ தெரியாமலோ இந்தப் புனித ஜ்வாலையை அணைக்கத் திட்டமிட்டு வருகிறார்கள்.

## 3,500 குழந்தைகளுக்கு வாதநோய் தடுப்பு மருந்து

### லேடிறிச்வே ஆஸ்பத்திரியில் கொடுக்கப்பட்டது

கொழும்பு, வியாழன்

இளம்பிள்ளை வாதநோயினல் பீடிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட 12 வயதுக்குட்பட்ட சுமார் 3,500 குழந்தைகளுக்கு, இன்று கொழும்பு லேடிறிச்வே ஆஸ்பத்திரியில் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது.

தடுப்பு ஊசி போடும் நிலையங்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. இந்நோய் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆலோசனை கேட்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். வழக்கத்துக்கு மாருகப் பரவியுள்ள இந்த நோயைத் தடுப்பதில் சுகாதாரப் பகுதி மும்முரமாக ஈடுபட்டுள்ளது. கடந்த ஜனவரி முதல் சென்ற ஞாயிறு வரை 137 பேர் இந்நோயினல் பீடிக்கப்பட்டிருக்கிருர்களென்றும், கடந்த 48 மணி நேரத்தில் 9 பேருக்கு மேலும் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டதென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## பாரதியார் கையெழுத்துப் பிரதி மைக்ரோபடம் பிடிக்கப்படும்

சென்னை, மார்ச் 20

சென்னை எழும்பூரிலுள்ள நூதனசாலையில் இப்போது பேணிக் காக்கப்பட்டுவரும் பாரதியாரின் கையெழுத்துப் பிரதிகள் கூடிய விரைவில் மைக்ரோ பிலிம் பிடிக்கப்படும்.

பாரதியாரின் கையெழுத்துப்பிரதிகளைச் சேகரித்து நூதனசாலையில் 14 தொகுதிகளாக வைக்கப்பெற்றுள்ளன. இவற்றை முதலில் மைக்ரோ பிலிம் எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## "பரீட்சை விஞத்தாள்கள் மார்க்கெட்டில் விற்பனை"

திருவனந்தபுரம், மார்ச் 22

நடப்பு பாடசாலை கடைசிப் பரீட்சை விஞத்தாள்கள், பரீட்சைக்கு முன்னதாக திருச்சூர் மார்க்கெட்டில் கிடைப்பதாக ஸ்ரீ டி. சி. நாராயணன் நம்பியார் கேரள அசெம்பிளியில் கூறினர்.

அரசாங்கம் கவனத்துக்குக் கொண்டு வரும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து அவர் பேசுகையில், ஆங்கிலப் பரீட்சைக்கான விஞத்தாள்கள் மார்ச் 18-ல் திருச்சியில் கிடைத்ததாகவும், மார்ச் 19-ல் ஆங்கிலப் பரீட்சையென்றும், அதேமாதிரி நடைபெறவிருக்கும் கணக்குப்பரீட்சைக்கான விஞத்தாள் மார்க்கெட்டில் விற்கப்பட்டதாகவும் கூறினர்.

## திருக்கேதீச்சர ஆலயம் அலங்காரோத்சவ விழா

திருக்கேதீச்சரம், வியாழன்

திருக்கேதீச்சர ஆலயத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை அலங்காரோத்சவ விழா ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து பதினைந்து தினங்களுக்கு பூசை, அபிஷேகம் என்பன நடைபெறும். திருவிழாக்கள் ஒவ்வொன்றையும் பொறுப்பேற்று நடாத்த சிவநேயச் செல்வர்களும், சைவக் கல்லூரிகளும், சபைகளும் முன்வந்துள்ளன. 19-4-62-ல் தீர்த்த விழா நடைபெறும்.

## கடலில் பிள்ளையார் இரதம்

தெல்லிப்பழை, வியாழன்

காங்கேசன்துறை கடலில் பிள்ளையார் இரதம் என்னும் படகு மீன்பிடிப்பதற்காக இறக்கப்பட்டது. இருபத்திரண்டாயிரம் ரூபா பெறுமதியான இப்படகு அரசினரின் கடனுதவியுடனே அமைக்கப்பட்டது.

## கும்பழாவளை கோவில் கும்பாபிஷேகம்

அளவெட்டி, வியாழன்

அளவெட்டி, கும்பழாவளை பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் 26-3-62 திங்கட்கிழமை நடைபெறும். அத்துடன் புதிதாக அமைக்கப்பெற்ற வைரவர் ஆலயத்தில் புதிய விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பெற்று அதற்கும் கும்பாபிஷேகம் நடைபெறும்.

## பிரதோஷ மூர்த்தி கும்பாபிஷேகம்

சுன்னுகம், வியாழன்

சுன்னுகம் மயிலணி சிவன் கோயிலில் நேற்றுக்காலை, புதிதாக ஸ்தாபிக்கப்பெற்ற பிரதோஷமூர்த்திக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. மேற்படி ஆலயத்தில் கடந்த சில ஆண்டுகளாகக் கூட்டுவழிபாடு நடந்துவருவது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பமாகி இரண்டு ஆண்டுகட்கிடையில் ஒரு உற்சவ மூர்த்தியைஸ்தாபித்து,வெள்ளி வாரந்தோறும் சுவாமி வீதி வலம் வருவதற்கு ஏற்பாடாகி இருக்கின்றது.

## தீ விபத்தில் 2 கோடி நஷ்டம்

கல்கத்தா, மார்ச் 22

இந்தியா நேப்பாள எல்லையோரமாக உள்ள விராட நகரில் நேற்று மாலை தீப்பிடித்ததினல் ஆயிரக்கணக்காஞேர் வீடுகளை இழந்தனர். சொத்து சேதம் இருகோடி ரூபாய்களென மதிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் உயிரிழந்தார்.

## ராஜா இந்தியா திரும்புகிறுர்

லியப்போல்ட்வில்லி, மார்ச் 22

காங்கோவில் இந்தியப்படைத் தளபதியாகச் சென்று சேவை புரிந்த பிரிகேடியர் ராஜா இன்று லியப்போல்ட்வில்லியிலிருந்து இந்தியாவுக்குப் பிரயாணமானர்.

விமான நிலையத்தில் ஐ. நா. படைத் தளபதியும் மற்றும் ஐ. நா. வீரர்களும் அவரை வழியனுப்பி வைத்தனர். பிரிகேடியர் ராஜாவின் சேவையைப் பாராட்டி ஐ. நா. தலைமைக் காரியதரிசி யு தாண்ட் ஒரு செய்தி அனுப்பியிருந்தார்.

## அரசாங்க இலாகாக்களில் தமிழ் உபயோகம்

### மேலும் நீடிக்கப்படுகிறது

சென்னை, மார்ச் 22

ஏப்ரல் முதல் தேதி முதல் ஹைவேஸ், கிராம ரஸ்தாக்கள், புள்ளிவிவர கணக்கு இலாகாக்கள் ஆகியவற்றில் ஜில்லா மட்டத்தில் தமிழ் மொழியே உபயோகிக்கப்பட வேண்டுமென்று சென்னை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

## நெடுந்தீவில் முத்தமிழ் விழா

வேலணை, வியாழன்

நெடுந்தீவு முத்தமிழ்க் கழகம் ஏப்ரல் 16, 17-ம் திகதிகளில் முத்தமிழ் விழாவொன்றை நடத்த முடிவு செய்துள்ளது.

## நன்றி நவிலல்

காலம் சென்ற எமது அன்னை திருமதி மார்கிறட் கந்தையா (பாக்கியம்) அவர்கள் இயற்கை எய்தியபோது நேரில் சமூகந் தந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் துக்கசாகரத்தில் பங்கு கொண்ட உறவினர்கட்கும் நண்பர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேம். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நன்றி நவில இயலாமைக்கு வருந்துகிறேம்.
க. பாக்கியநேசரும், சகோதரர்களும், 47 ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

## கள்ளக் கடத்தல் பொருள்கள் பறிமுதல்

### சென்னையில் 4 பேர் கைது

சென்னை, மார்ச் 22

கொழும்பிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட சாமானகளை வைத்திருந்ததாக சென்னையில் கீழக்கரையைச் சேர்ந்த அமீன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

நகரில் பல இடங்களை சுங்க இலாகா அதிகாரிகள் சோதனை நடத்தியதையடுத்து, அந்நால்வரும் அவ்வாறு கைது செய்யப்பட்டனர். கொழும்பிலிருந்து கள்ளத்தோணிகள்மூலம் கடத்தி வந்து நகரில் சில வீடுகளில் வைத்திருந்த பிளேடுகள், பைலட் பேனுக்கள் உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

## சப் இன்ஸ்பெக்டர் தற்கொலை

தஞ்சாவூர், மார்ச் 22

தஞ்சாவூர் தாலுக்கா சப் இன்ஸ்பெக்டர் திரு. ராஜா செட்டியார் என்பவர் பொலிஸ் ஸ்டேஷனுக்கருகிலுள்ள தனது அறையில் ஒரு துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

இவருக்கு ஒரு பெண்ணும் மகனும் இருக்கிருர்கள்.

தஞ்சை ஜில்லா அடிஷனல் பொலிஸ் சுப்பிரெண்டென்ட் புலன்விசாரணை செய்து வருகிருர்.

## விமான சேவை ரத்து

பாரிஸ், மார்ச் 22

அல்ஜீரியாவில் நிலைமை ஸ்திரமாக இல்லாததால் பாரிசிலிருந்து அல்ஜீரியாவுக்குச் செல்லும் விமான சேவைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# 'எதிரி கத்தியால் குத்தியதை நான் பார்த்தேன்'

## பலாலி கொலை வழக்கில் இறந்தவர் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 24-ம் திகதி பலாலியைச் சேர்ந்த சின்னப்பொடியன்சபாபதி என்பவரைக் கொலை செய்ததாகவேலுப்பிள்ளைசிதம்பரப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம் ஆகிய இருவர்மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு, வட மாகாண அசைஸில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிராசிக்கியூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜராஞர்.

திரு. ஏ. நித்தியானந்தன், திரு. ஏ. டி. துரையப்பா ஆகியோரின் அனுசரணையுடன் திருவாளர்கள்: ஈ. பி. சத்துருகுலசிங்கா, டி. கணேஷலிங்கம் ஆகிய இருவரும் முதல் எதிரி சார்பில் ஆஜராஞர்கள். திருவாளர்கள்: ஏ. நித்தியானந்தம், ஏ. டி. துரையப்பா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. டி. கணேஷலிங்கம் இரண்டாவது எதிரி சார்பில் ஆஜராஞர்கள்.

எதிரிகள் சார்பில் திரு. ஆனந்த குமாரசாமி அரசாங்கத் தரப்பில் ஆஜராஞர்.

பாலாலியைச் சேர்ந்த சபாபதியின் விதவை (24 வயது) சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார். "கடந்த வருடம் பெப்ரவரி மாதம் நான் பலாலியில் வசித்தேன். இறந்த எனது கணவர் மேசன் தொழில் பார்த்துவந்தார். எதிரிகள் இருவரும் இனத்தவர்கள் முதல் எதிரி எனது மாமா. இரண்டாவது எதிரி, முதல் எதிரியின் மகனுகும். சம்பவம் நடைபெற்ற சமயம் எனது கணவரின் தந்தை, அவருக்குப் பக்கத்தில் இருந்தார். அப்பொழுது எதிரிகள் இருவரும் "அடேய்...சபாபதி..." என்று கூறிக்கொண்டே அங்கு வந்தனர். வல்லிபுரம் எனது கணவரைத் தாக்கினர். சிதம்பரப்பிள்ளை கணவரை கத்தியால் குத்தினர். இதைக்கண்டதும் நான் குழறினேன். அவர்களிருவரும் அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டனர். எனது கணவர் இறந்துவிட்டார். பின்னர் பொலிஸாரிடம் நான் சென்று முறையிட்டேன்.

விசாரணை நாளை தொடர்ந்து நடைபெறும்.


### தேவை

பலசரக்கு வியாபாரத்தில் பட்டடை அனுபவமும், பிற வியாபாரிகளிடம் சாமான் தரம் பார்த்துக் கொள்முதல் செய்யவும், சாமான் விற்றுப்பில் போடவும் நன்கு பழகிய ஆட்கள் தேவை. நேரில நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விநோதன்ஸ் அன் கம்பனி, 108, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்.

### மெஷின் மைண்டர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு கம்பனிக்கு அனுபவம் வாய்ந்த சிலிண்டர்-பிளாட்டின் மெசின் மைண்டர்கள் தேவை. அச்சு இயந்திரம் பழுது பார்க்கும் அறிவு விசேஷ தகைமையாகக் கணிக்கப்பெறும். விபரங்கட்கு X 25, C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

C. N. தொடர்ச்சி இலக்க பீ. எஸ். ஏ. மோட்டார் சைக்கிள் (2.5) விற்பனைக்கு உண்டு கிழமை நாட்களில் காலை 8-30 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் பார்வையிடலாம். மற்றநாட்களில் கரவெட்டி தபால்கந்தோரில் பார்க்கலம்.


# நேருவை சந்திக்க அயூப்கான் தயார்!

ராவல்பிண்டி, மார்ச், 22

காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக பாரதப் பிரதமர் திரு. நேருவுடன் எச்சமயமும் எந்த நேரமும் சந்தித்துப் பேசத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் இன்று தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளின் மூலம் உருவான பயன் கிடைக்குமென்பது நிச்சயமாகத் தெரிந்தால் இதற்குத் தயார் என்று அயூப்கான் கூறினர்.

ஆனல் நேருவும் தானும் நேரடியாகச் சந்திப்பதற்கு முன் இரு நாடுகளையும் சேர்ந்த மந்திரிகள் ஆயத்தப்பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென்றும் ஜனதிபதி அயூப்கான் கூறினர்.

## மாதர் சங்கப் பொதுக்கூட்டம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை, மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை சங்கத் தலைவி திருமதி பா. ஞானசக்தி (ஆசிரியை) தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சங்கக் காரியதரிசியும் ஆசிரியையுமான திருமதி தி. திலகவதி பேசுகையில் "கிராம சேவையில் மாதரும் பங்குபற்றுவதவசியம்" எனக் குறிப்பிட்டார்.

- சங்கத்தின் வளர்ச்சி - ஆக்க வேலைகள்பற்றி நீண்ட நேரம் ஆலோசிக்கப்பட்டன. சங்க ஆதரவில் 'தையல் நிலையம்' ஒன்றை நடத்துவதுபற்றி முடிவு செய்யப்பட்டது.

மேற்படி சங்கத்தைப் பதிவு செய்துதரவேண்டுமென தீவுப் பகுதிக் காரியதரிசியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## மரணத்திலும் ஒற்றுமை

சென்னை, மார்ச் 22

நேற்று இரவு சாப்பாட்டிற்குப் பிறகு படுக்கச் சென்ற ஒரு கணவனும் மனைவியும் மீண்டும் எழுந்திருக்காத பரிதாப சம்பவம் நகரில் சமீபத்தில் நடந்துள்ளது.

எருக்கஞ்சேரி சுண்ணும்புக் காளவாயில் வேலை செய்பவர்கள் என்று கூறப்படும் மாரிமுத்து (வயது 50) இவரது மனைவி தாங்தோணி அம்மாள் (40 வயது) ஆகிய இருவரும் உணவருந்திவிட்டு படுக்கச் சென்றனராம். காலையில் அவர்கள் எழுந்திருக்கவே இல்லை. இதைக் கண்ட இவ்வூர்ப்பஞ்சாயத்து தலைவர் திரு. பச்சை இத்தகவலை- பொலிசாருக்குத் தெரியப்படுத்தினர்.

உணவில் விஷக்கலப்படம் இருக்குமோ என்று சந்தேகிக்கப்படுகிறது.

## வட்டி விகிதம் குறைக்கப்பட்டது

லண்டன், மார்ச் 22

பிரிட்டிஷ் வங்கி வட்டி விகிதம் மீண்டும் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.


### புற்றுநோய்

சித்த வைத்திய முறையிலே புற்றுநோய்க்கு கைகண்ட மருந்து

"யோகீஸ்வர ரசம்"

நேரில் கலந்து ஆலோசிக்கவும்

பொ. செல்லையா
ஆயுள்வேத புற்று நோய் நிபுணர்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### சோதிடர்

உங்களது வாழ்வில் 1962—63—64 ல் என்ன நடக்கும்? அறிய விருப்பமா?
ரூபா 1-00 போஸ்டர் ஆடர் அனுப்பி
"மனிதவாழ்வில் என்ன?"
என்னும் நூலைப் பெறுக
'தமிழ்மணி பதிப்பகம்'
குமாரசுவாமி வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணம் கண்டு களிக்கும் குதூகல வைபவம்

## சென். ஜோன்ஸ்-சென்ட்ரல் கிரிக்கட் போட்டி

— அழகு சுப்பிரமணியம் —

**கொழும்பில் சமீபத்திலேதான் 'ரோயல்—தோமியன்' கிரிக்கட் போட்டி நடைபெற்றது. இதனைப்பார்த்து மகிழ்வதற்குக் கொழும்பு மாநகரமே மே 'ஓவல்' விளையாட்டு மைதானத்தில் திரண்டு நின்றது.**

**இன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் சென். ஜோன்ஸ்-சென்ரட்ல்கல்லூரிகளின் கிரிக்கட்போட்டி ஆரம்பமாகின்றது. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் போட்டிகளை நேரிற் பார்ப்பவர்கள், யாழ்ப்பாணக் கிரிக்கட் போட்டி சமுகப் பொது வாழ்வில் ஓர் உயர்ந்தநிலை பெற்றிருப்பதை உணர்வார்கள் என்பது கட்டுரையாளர் கருத்து.**

கிரிக்கட் விளையாட்டு பற்றிப் பிரபல ஆங்கில அறிஞர் ஒருவர் கூறிய சில வார்த்தைகள் ஆங்கில மக்களுக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. கிரிக்கட் சலிப்புத் தட்டும் விளையாட்டு என அவர் கூறினர். "வளர்ந்த தடியர்கள் ஒரு பந்துக்குப் பின்னல் ஓடுவதையும், ஆறுகட்டைகளுக்கு நடுவே அவர் ஓடிப்பிடிப்பதையும் பார்ப்பதில் மக்களுக்கு என்ன சந்தோஷம் இருக்கிறதோ தெரியவில்லை" என்று நையாண்டியாகக் கூறினர். இக்த ஆங்கில அறிஞரின் கூற்று ஆங்கில மக்களுக்குச் செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே இருந்து. ஆங்கில மக்கள் கிரிக்கட்டை ஒரு விளையாட்டாக மட்டும் கருதுவதில்லை.கிரிக்கட்டை அவர்கள் ஒரு கொண்டாட்டமாகவே கொள்கிறார்கள். சிநேகபூர்வமான சர்வதேசப் போட்டி எனவும் சிலர் கருதுகிறார்கள். நான் கருதுவது போல ஒரு சிலா கிரிக்கட்டை ஆங்கில நடனங்களில் ஒன்ருகவும் கருதுகின்றனர்.

லண்டனிலுள்ள 'லோர்ட்ஸ்' கிரிக்கட் மைதானத்துக்குச் சென்ற ஒருவர் ரசிகத்தன்மை குறைந்தவராக இருக்க வேண்டும். சிவப்பு நிறப் பந்தும், பச்சைநிறப் புல்தரை மைதானமும், நீல வானமும், வெள்ளை உடையில் நிற்கும் கிரிக்கட் வீரர்களும், பந்து 'பாட்' ஆகியவற்றின் அளவுகளும் கிரிக்கட் விளையாட்டையே மிச்சம் 'டல்' லாக்கி விடும்.

பலதரப்பட்ட மக்களுக்கும் கிரிக்கட்டில் விருப்பம் ஏற்படுவதுண்டு. இசை பற்றி எழுதிய நெவிலிகாடஸ் கிரிக்கட் பற்றி எழுதுகிறார். கணித நிபுணரான பேராசிரியர் ஹார்டி தவருமல் கிரிக்கட் விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிட்டார். அலன் ரோஸ் என்னும் ஆங்கிலக் கவிஞர் 'ஒக்ஸ்போட்'டுக்காகக் கிரிக்கட் விளையாடினர். மேற்கு இந்திய அறிவாளியான சி. எல். ஆர் ஜேம்ஸ் கிரிக்கட் செய்திகள் நிருபராகத் தமது வாழ்க்கையையே ஆரம்பித்தார்.

இவைமட்டுமல்ல. லண்டன் 'லோர்ட்ஸ்' மைதானத்தில் 'ஒக்ஸ்போர்டுக்கும்,' 'கேம்பிரிட்ஜ்ஜுக்கு மிடையே நடக்கும் கிரிக்கட் போட்டிகள் ஆங்கில மக்களையே வசப்படுத்தி விடுகின்றன. ஆங்கில அழகிகள் உடையலங்காரத்துடன் கவர்ச்சிகரமாகக் காட்சியளிப்பர். கிரிக்கட் பார்ப்பவர்கள் கட்டழகிகளையும் அவர்களின் அலங்காரங்களையும் கண்டு களிக்கலாம்.

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் அதிபர் ஒருவரே யாழ்ப்பாணத்தில் கிரிக்கட்டைத் தொடக்கி வைத்தார். வண. டபிள்யு. எம். பி. விஸ்க்ஸ் 64 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபராகப் பணியாற்றுகிறார். கிரிக்கட் விளையாட்டை அவர் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்தகாலத்திலிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், சென். ஜோன்ஸ் கல்லூரியும் கிரிக்கட் போட்டியில் ஈடுபட்டு வந்தன. சென்ற 64 வருடங்களாக இரு கல்லூரிகளுக்குமிடையே கிரிக்கட் விளையாட்டுப் போட்டி நடைபெற்று வந்துள்ளது. இன்றும் நாளையும் யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் கிரிக்கெட் கோஷ்டியினர் படைவீரர்கள்போல மைதானத்தில் தோற்றுவர். இரு கல்லூரிகளின் பழைய மாணவர்களுக்கும் 'உஷார்' ஏற்படும். ஆவலும் குதூகலமும் அவர்களை ஆட்டிவைக்கும். அவரவரது கல்லூரியின் வெற்றி தோல்விக்கேற்ப அவர்களது உள்ளமும் துடித்துக்கொள்ளும்.

இவைமட்டும்தானு? வேம்படி மகளிர்கல்லூரி மாணவிகள் மத்திய கல்லூரிக்கு வீரமுடன் ஆதரவுகாட்டுவார்கள். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியினர் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு மகிழ்ச்சியுடன் ஊக்கமளிப்பார்கள். யாழ்ப்பாண மக்களுக்கு இந்நாட்கள் குதூகல நாட்களாகும்.

நாகரிக நாரீமணிகள் அனைவரும் தமது 'சோளி'களுடனும் நைலோன் புடவைகளுடனும் விளையாட்டிடம் பார்க்க வந்து விடுவார்கள். அழகிய பெண்களும், நவநாகரிக மங்கையரும் கூடும் இந்த வைபவம் யாழ்ப்பாணத்தின் ஒரு கொண்டாட்டமாகவே மாறிவிடும். இந்த விளையாட்டுப் போட்டியை "பெரிய போட்டி" என்று பலரும் குறிப்பிடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. சிலர் இதை வடமாகாணத்தின் "ரோயல்—தோமியன்" விளையாட்டுப் போட்டி என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனல் இரண்டு போட்டிகளையும் பார்வையிட்ட ஒருவருக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இப் போட்டி சிறந்ததாகத் தோன்றும். பண்பாட்டையும் பழக்கத்தையும் பொறுத்தவரை எங்கள், போட்டி 'ரோயல்—தோமியன் போட்டியிலும் சிறந்ததுதான்'

## 'சிரமதானத்துக்கு' ஆதரவில்லை

இரத்தினபுரி, வியாழன்

இரத்தினபுரி புதிய ஆஸ்பத்திரிச் சந்தியில் பிரயாணிகள் தங்கி நிற்குமிடம் ஒன்று கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் இரத்தினபுரி நகரசபையால் கோரப்பட்டிருந்த போது ஒரே ஒரு மனுப்பத்திரமே அனுப்பப்பட்டிருந்தது.

நகரசபை அங்கத்தவரான திரு. சரத் முத்ததுவாகம கேள்விப்பத்திர காரருக்குக் கொடுக்காது சிரமதான இயக்கத்தின் மூலம் கட்டிவிடலாமென அபிப்பிராயம் தெரிவித்தார்.

சிரமதான இயக்கத்தின் மூலம் செய்வதானல் வேலை துரிதமாக நடைபெருது என நகரசபை உதவிதலைவர் குறிப்பிட்டார்.

இறுதியில் வாக்கெடுப்புக்கு விட்டபோது பஸ் பிரயாணிகள் தங்குமிடம் கட்டுவதை டெண்டரில் விடுவதென்னும் பிரேரணைக்கு ஒருவாக்கு அதிகப்படியாகக் கிடைத்தது. எனவே இந்த வேலையை டெண்டரில் விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## கொல்லங் கலட்டியில் சங்கீத வகுப்பு

தெல்லிப்பழை, வியாழன் மாலை. கொல்லங்கலட்டி அருள்நெறிக்கழக ஆதரவில் இயங்கும் அருள் நெறிக்கலாசாலையில்சங்கீதப்பகுதியும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதெனத் தெரிகிறது.

## இரத்தினபுரியில் கடும் வரட்சி

### குடிதண்ணிருக்குத் தட்டுப்பாடு

இரத்தினபுரி, வியாழன்

வரட்சி காரணமாகக் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இரத்தினபுரி வாசிகள் ஆற்று நீரை குடிநீராகவும் பாவித்து வருகிறார்கள். தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிக்குமாறு இரத்தினபுரி மக்கள் நகரசபை அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஆற்று நீர் குடிநீராக விநியோகிக்கப்படு முன்னர் 'குளோரீன்' சேர்க்கப்பட்டுச் சுத்தமாக்கப்படுகிறது. ஆற்று நீரும் படிப்படியாக வற்றிவருகிறது. சிற்றருவிகளெல்லாம் ஏற்கெனவே வற்றிப்போய்விட்டன.

**ஹக்மன**

இலங்கையிலுள்ள சிறந்த நெல் நிலங்களைக் கொண்ட கங்கபோடாப்பட்டுப் பகுதியில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. நெல் விதைப்பதற்குக் கமக்காரர்கள் மழையைக் காத்திருக்கிறார்கள்.

**பொல்காவலை**

கடும் வரட்சியின் பின்னர் இப்பகுதியில் சென்ற சனிக்கிழமை கடும் மழை பெய்தது. வரட்சி நாட்களில் கிணறுகள் பலவற்றில் நீர் வற்றிவிட்டது. நகரப் பகுதிகளில் பணம் கொடுத்து மக்கள் தண்ணீர் வாங்குகின்றனர்.

## புண்ணக்கு ஏற்றுமதித்தடை

### தற்காலிகமாக நீக்கம்

கொழும்பு, வியாழன்

புண்ணக்கு ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அரசாங்கம் தற்காலிகமாக நீக்கியுள்ளது. பெப்ரவரி 28-ந் திகதிவரை செல்லுபடியாகுமென வழங்கப்பட்டிருந்த லைசன்ஸ்கள் இனி மே மாதம் 31-ந் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ஆனல் புண்ணக்கு ஏற்றுமதிக்கு புதிய லைசன்ஸ்கள் வழங்கப்பட மாட்டாதெனத் தெரிய வருகிறது.

5000 தொன் புண்ணக்கு மட்டுமே ஏற்றுமதி செய்வதற்கு லைசன்ஸ்கள் புதுப்பிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.


தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ உகந்தது ஜம்பிங் பிஷ்

பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கனமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் இடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்:

ஸி. டப்ளியூ ஈ

கிடைக்குமிடங்கள்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மங்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியு- ஈ. தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

## விளையாட்டு வீரர்கள்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பந்து பொறுக்குபவர்களில் ஒருவராகும்.

12. ஈ. ஜே. சிற்றம்பலம்: முதல் உதவி வீரர்களில் (ரிசர்வ்) ஒருவரான இவர் பல கல்லூரிகளுடன் விளையாடும் வாய்ப்பை பெற்றவர். வெள்ளி, சனிக்கிழமைகளில் விளையாடும் வாய்ப்பு ஏற்படலாம்.

13: ஆர். சஞ்சிதானந்தம்:- இரண்டாவது உதவி வீரர் (ரிசர்வ்).

### சென். ஜோன்ஸ்கல்லூரி விளையாட்டு வீரர்கள்

1. டி. எம். செல்வநாயகம் மூன்றுவது வருடமாக விளையாடும் இவரே கல்லூரியின் கிரிக்கட் கோஷ்டிக்குத் தலைவர் ஆகும். திறமையாக துடுப்பெடுத்தாடும் தன்மையையுடைய இவர் அமைதியும், சாந்தமுமுடன் கோஷ்டியைச் கொண்டு நடத்துபவர். திறமையாகப் பந்து பொறுக்கும் தன்மையும் கொண்டவர்.

2. டபிள்யூ- டி ராஜ்குமார்: மூன்றுவது வருடமாக கல்லூரிக்குவிளையாடும் இவர் கோஷ்டியின் உப தலைவர் ஆகும். கல்லூரியின் ஆரம்ப பந்து வீச்சுக்காரரில் ஒருவரான இவர் பந்து வீச்சில் நல்ல பெயர் பெற்றவர். துடுப்பெடுத்தாடுவதில் மிக கெதியாக ரன்கள் சேர்த்துக்கொள்வார்.

3. டி ஜே. என். செல்வத்துரை: மூன்றுவது வருடமாக கல்லூரிக்கு விளையாடும் இவர் இடது கையினுல் மிகத் திறமையாக துடுப்பெடுத்தாடுவார். ஏமாற்றுப் பந்தெறியில் நல்ல பெயர் பெற்றவர்.

4. எம். தெய்வேந்திரா: மூன்றுவது வருடமாக கல்லூரிக்கு விளையாடுகின்றூர். கோஷ்டியில் மிக இளமையானவர். திறமையாக இடக்கையினுலேயே பந்து விசியும் துடுப்பெடுத்தாடும் தன்மையையும் உடையவர். அகில யாழ் கோஷ்டிகது கடந்த வருடங்களில் விளையாடியவர்.

5. பி. கனகதுரை: இரண்டாவது வருடமாக கல்லூரிக்கு விளையாடுகின்றூர். கல்லூரியின் தொடக்கப் பந்து வீச்சுக்காரரான இவர் பந்து வீசுவதில் திறமையுடையவர். பந்தை வேகமாக துடுப்பெடுத்தாடுவார். பந்து பொறுக்குவதிலும் திறமையுடையவர்.

6. ஆர். என். சேதுகாவலர்: இரண்டாவது வருடமாக கல்லூரிக்கு விளையாடும் இவர் பந்து வீசுவதில் மிகத் திறமையானவர் சம்பத்தரிசியார் கல்லூரியுடன் விளையாடிபொழுது 40 ரன்களை கொடுத்து 9 விக்கட்டுக்களை விழுத்தி வெற்றிக்கு முழு மூச்சுடன் நின்றூர்.

7. ஆர். ஜே. ஜெகநாதன் இரண்டாவது வருடமாக கல்லூரிக்கு விளையாடும் துடுப்பெடுத்தாடுவதில் முன்னேறிக் கொண்டு வருகின்றூர்.

8. ஆர். தம்பிஐயா: இவ்வருடம் புதிதாக கோஷ்டியினுள் புகுந்திருக்கும் இவர் இடக்கையினுல் துடுப்பெடுத்தாடுவதில் திறமையானவர்.

9. டி. வைரவபிள்ளை: இவ்வருடம் புதிதாக கோஷ்டியினுள் நுழைந்திருக்கும் இவர் நல்ல கிரிக்கட் அநுபவமுடையவர். 1961-ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டிக்கு தலைமை தாங்கியவராவர்.

10. சி. ஆனந்தகிருஷ்ணன்: முதல் வருடம் கோஷ்டியினுள் நுழைந்த இவர் திறமையான "விக்கட் காவலராகும்" துடுப்பெடுத்தாடுவதிலும் திறமையுள்ள இவர் ஹாட்லிக் கல்லூரியுடன் விளையாடியபோது 43 ரன்களை பெற்றுக் கொடுத்தார்.

11. பி. தவநாதன்: முதல் வருடம் கோஸ்டியினுள் நுழைந்த இவர் திறமையாக பந்து பொறுக்குபவர்.

12. முதலாவது ரிசர்வ்: ஏ. ஜே. பாலசந்திரன்.

13. இரண்டாவது ரிசர்வ்: ஆர். லோற்றன்.

14. மூன்றுவது ரிசர்வ்: வி. விவேகானந்தன்.

## தோட்ட கோவில் விழா

எட்டியாந்தோட்டை, புதன்

எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த கழனிதோட்டத்தில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் திருவிழா ஜனநாயக தொழிலாளர். காங்கிரஸ், தோட்டக் கமிட்டியினராலும் பொது மக்களாலும் நடத்தப்பட்டது.

இவ்விழாவின்போது தோட்டத்துரை திரு. டபிள்யு. பி. பெரேராவும் ஜனநாயக தொழிளாளர் காங்கிரஸ், கழனிவேலி மாவட்ட பொதுக் காரியதரிசி திரு. ஏ. பாலகிருஷ்ணனும், ஜில்லாப்பிரதிநிதி திரு. எஸ். ராஜுவும் சமுகமளித்திருந்தார்கள். கரகம், காவடி, கண்டியன் நடனம் ஆகியவைகள் இடம் பெற்றிருந்தன. தோட்டத்துரை திரு. டபிள்யு. பி. பெரேரா கதிர்வேலாயுத சுவமிக்கு மலர்மாலை அணிவித்து வணங்கினுர்.

மற்படி விழாவில் உரை நிகழ்த்திய ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், கழனிவேலி மாவட்டப் பொதுக் காரியதரிசி திரு. ஏ. பாலகிருஷ்ணன் கூறியதாவது:-

கோவில்கள் ஆண்டவனை வணங்குவதற்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல. மக்கள் சமாதானமாக வாழ்வதற்கும் சகோதர எண்ணங்களை வளர்ப்பதற்கும் சேர்த்துத்தான் ஏற்பட்டது. பிரார்த்தனைகள், அநீதிகள் அக்கிரமங்கள் தொல்லைகள் இவைகளிலிருந்து விடுபடவேண்டும் என்ற எண்ணத்தின் மீதே ஏற்பட்டவை. இவைகளையெல்லாம் நல்ல முறையில் நாம் உணர்ந்துகொள்வோம். அந்தக் காலங்களில் கோவில்கள் அறிவை வளர்க்கும் அறிவுக் கூடங்களாகவும் கலை வளர்க்கும் கலைக்கூடங்களாகவும் விளங்கி வந்தன.

# கிராமப்புற இளைஞருக்கு விவசாயத்தில் பயிற்சி

## விஞ்ஞான முறையில் அளிக்கத் திட்டம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க கம நிலங்களிலும் தமது செந்தக் கமங்களிலும் கமம் செய்துவரும் கிராமப்புற இளைஞர்களுக்கு விஞ்ஞான முறை விவசாயப் பயிற்சி வழங்கும் திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டும் என காணிவிவசாய இலாகயோசனை தெரிவித்துள்ளது.

கிராமப்புற இளம் விவாசாகிகள் ஏற்கெனவே முயற்சியில் இறங்கியுள்ளார்களா கையால் அவர்கள் ஓய்வாக இருக்கும் விளைச்சல் பருவம் முடிந்த காலத்திலேயே பயிற்சி வழங்கப்பட வேண்டும்என இலாகா ஆலோசனை கூறியுள்ளது.

விவசாயப் பயிற்சி இருவகையான பள்ளிக்கூடங்கள் மூலம் இன்று வழங்கப்படுகிறது. ஒன்று, பேராதனை குண்டசாலை விவசாயப் பள்ளிக்கூடங்கள் மூலமாக மற்றையது, சகல மாகாணங்களிலுமுள்ள கிருஷகபாடசாலை மூலமாக

இரு விவசாயப் பள்ளிக்கூடங்களிலிருந்தும். வருடாந்தம் 150 மாணவர்கள் பயிற்சியை முடித்துக் கொள்கிறூர்கள். மாவட்ட கிருஷக பாடசாலைகளிலிருந்து வருடாந்தம் 850 மாணவர்கள் பயிற்சி பெற்று வெளியேறுகிறூர்கள்

விவசாய அபிவிருத்திக்கு இவர்களின் சேவை உடனடியாகவே கிடைப்பதில்லை. விவசாய இலாகாவின் பலதரப்பட்ட கிளைகளில் உள்ள உத்தியோகங்களில் இருக்கும் இவர்கள் நேரடியாக ஆற்றக்கூடிய சேவை விவசாயத்துக்குக் கிடைப்பதில்லை. அத்தோடு இவர்களில் பலர் வேறு தொழில் தேடித் திரிந்து சலிப்புற்ற பின்னரே விவசாய பயிற்சியில் பலர் இறங்குகிறூர்கள் எனவும் விவசாய இலாகா அறிவித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தின்....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வேந்திரா, பி. கனகதுரை, ஆர் என். சேதுகாவலர், ஆர். ஜே ஜெகநாதன், ஆர். தம்பிஐயா, சி. ஆனந்தகிருஷ்ணன், டி. வைரவிப்பிள்ளை, பி தவநாதன், ஏ. ஜே. பாலச்சந்திரன், ஆர். லோங்டன், வி. விவேகானந்தன் ஆகியோர் விளையாடுகின்றனர்.

மத்தியகல்லூரி கோஷ்டியில் ஜே. கனகநாயகம் (காப்டன்), டி. தர்மராசா, ஆர். மகேந்திரன், வி. ரி. மகாலிங்கம், எம். எஸ். எம். ஹரிஸ், டி. பி. பத்மதேவா, பி. என். மனோகரன், பி.எஸ்.ஏ.பிரகாம், எஸ். ஸ்ரீநிவாசன், வி. சிவபோதிநாதன், எஸ். இராஜகிருஷ்ணன், ஈ. ஜே. சிற்றம்பலம், ஆர். சச்சிதானந்தன், எஸ். பத்மநாதன் ஆகியோரும் விளையாடுகின்றனர்.


பாலகனுக்கு எவ்வளவு காலம்தான் நீங்கள் வெறும் பாலை மட்டும் ஊட்டிவளர்க்கமுடியும்?

குழந்தை மூன்று, நான்கு மாதங்களானதும், முன்பைப்போல் வெறும் பாலை மட்டும் ஊட்டிப் பெற்ற அதே திடவிருத்தியையோ வளர்ச்சியையோ காணுமை கண்டு நீங்கள் அதிருப்தியடைவீர்கள்.

பாலோடு வேறு உணவையும் குழந்தைக்கு ஊட்டுவதற்கு ஏற்ற காலம் இதுவே. ஆனல் அச்சமயத்தில் ஓர் ஒழுங்கு முறையை மேற்கொள்ள வேண்டும். பாலோடு சேர்த்துக்கொடுக்கக்கூடிய முதல் கட்டி உணவு பார்லீஸ் சிசு போஷிப்பு ரஸ்குகளே என்பதை தலைமுறை தலைமுறையாக தாய்மார் நன்கு அறிவர்.

FARLEY'S

Baby's First Solid Food.

பார்லீஸ்

கனிப்பொருள்களும் விட்டமின்களும் கலந்ததொரு தனி உணவாகும். மிகமென்மையான ஜீரணத்திற்குக் கூட உகந்ததொரு சமதை உணவு.






பார்லீஸ் ரஸ்க் உணவைத் தயாரிப்பது மிகச் சுலபம். சூடான பாலைச் சேர்த்துக் கொண்டால் போதும்.

# யாழ்ப்பாணத்தின் மாபெரும் கிரிக்கெட் போட்டி

## இன்று ஆரம்பம்

### மத்திய கல்லூரிக்கா?

### சென் ஜோன்ஸ்க்கா வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையிலேயே பிரபல்யமான வடமாகாணத்தின் மிகப் பெரிய கிரிக்கட்போட்டி எனக் கருதப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி-யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ கல்லூரி கிரிக்கட் போட்டி இன்று மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இன்று ஆரம்பமாகும் 64-வது வருடாந்த கிரிக்கட் போட்டி நாளை தொடர்ந்து நடைபெறுகிறது.

சென்ருண்டு சத்தியாக்கிரகம் காரணமாக இப்போட்டி நடைபெறவில்லை. ஒருவருட ஓய்வுக்குப் பிறகு இம்முறை நடைபெறும் இப்போட்டியினல் யாழ்ப்பாண நகரமே விழாக்கோலம் பூண்டு காட்சியளிக்கிறது. தேர்தல் காலங்களை நினைவுறுத்துவது போன்று இரு கல்லூரிகளின் கொடிகளும் மோட்டார் வாகனங்களில் பறந்து பட்டொளி வீசிக்கொண்டிருக்கின்றன. இரு கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் விளையாட்டு மைதானத்தைச் சூழ்ந்த வண்ணம் மிகவும் உற்சாகம் காட்டி வருகின்றனர்.


இன்று ஆரம்பமாகும் இப்போட்டியின் மத்தியஸ்தர்களால் வழங்கப்படும் நான்கு மிகச் சிறந்த பரிசில்களில் எந்தக் கல்லூரி கூடுதலான பரிசைத் தட்டிக் கொள்ளும் என்பது பற்றி இப்பொழுதிருந்தே பலத்த ஹேஷ்யங்கள் நிலவிவருகின்றன. மிகச் சிறந்த பந்து பொறுக்கும் வீரர், மிகச்சிறந்த துடுப்பெடுத்தாடும் வீரர், மிகச்சிறந்த பந்து வீசும் வீரர். எல்லா வகையிலும் மிகச்சிறந்த வீரர் ஆகிய நால்வருக்கு இப்பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. இவற்றில் குறைந்தது இரண்டு பரிசில்களையாவது தமதாக்கிக் கொள்ளமுடியுமென சென்.ஜோன்ஸ் கோஷ்டி நம்பியிருக்கிற அதேவேளையில் மத்திய கல்லூரி நான்கு பரிசில்களையும் சுவீகரிப்பதற்கு முயற்சியெடுக்கிறது. 1960-ல் சென். ஜோன்ஸ், மத்திய கல்லூரி தலா இரு பரிசில்களைப் பெற்றிருக்கின்றன.

இருகோஷ்டிகளும் யாழ்ப்பாணத்திலேயே மிகப்பலம் வாய்ந்த கோஷ்டிகளாகும். ஆகவே யார் பக்கம் வெற்றி சாரும் என்ற கேள்வி எல்லா கிரிக்கட் ரசிகர்கள் மனதிலும் எழுந்துள்ளது.

வெள்ளிக் கிழமைப் போட்டி நண்பகல் 1-45 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு முடிவடையும் மீண்டும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6மணிக்கு முடிவடையும்.

இவ்விரு கல்லூரிகளினதும் இப்போட்டி 64-வது தடவையாக நடைபெறுகிறதென்பது இங்கு குறிப்பிடத்தக்து. கடந்த காலத்தில் நடைபெற்ற 63 போட்டிகளில் சில தவிர்க்க முடியாத காரணங்களால் 14 போட்டிகள் நடைபெறவில்லை. 10 போட்டிகள் இரு கல்லூரிகளுக்கும் சரிசமமாக முடிவடைந்துள்ளன சென். ஜோன்ஸ் கோஷ்டி 22 போட்டிகளிலும் மத்திய கோஷ்டி 17 போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ளன.

இந்தப்பருவத்தில் சென். ஜோன்ஸ் கோஷ்டி 5 கிரிக்கட் ஆட்டங்களையும், மத்திய கோஷ்டி 6 ஆட்டங்களையும் ஆடியிருக்கின்றன. சென். ஜோன்ஸ் ஆடிய 6 ஆட்டங்களிலும் இரண்டு போட்டிகள் வெற்றியாகவும், ஒன்று சரிசமமாகவும், முடிந்துள்ளன. எஞ்சிய இரண்டில் தோல்வியும் கண்டுள்ளது. ஆனல் கல்லூரியின் 6 ஆட்டங்களில் நான்கு வெற்றியாகவும், இரண்டு சமமாகவும் முடிவுற்றுள்ளன.



சென். ஜோன்ஸ் கல்லூரி

இருப்பவர்கள் இடமிருந்து:- ஆர். என் சேதுகாவலர், டி. ஜே. என். செல்வத்துரை, டி. எம் செல்வநாயகம், (காப்டன்) டபிள்யூ. டி. இராஜகுமார், எம். தெய்வேந்திரா, பி. கனகதுரை.

நிற்பவர்கள் இடமிருந்து:- ஆர். ஜே ஜெகநாதன், சி. ஆனந்தகிருஷ்ணன், டி. வைரவிப்பிள்ளை ஏ. ஜே. பாலச்சந்திரன், ஆர் தம்பிஐயா, ஆர். லோங்டன். பி. தவநாதன்.

மத்திய கோஷ்டி இவ்வாண்டு கிரிக்கட்பருவத்தில் இதுவரை தோல்வியடையவில்லை.

**தலைமைதாங்கும் வீரர்கள்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு ஜே. கனகநாயகமும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு எம். டி. செல்வநாயகமும் தலைமைதாங்கினர்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. ஜீ. ஏ. பி. சில்வா, யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். எம். டி. சில்வா ஆகியோர மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி கோஷ்டியில் டி. எம். செல்வநாயகம் (காப்டன்), டபிள்யு டி. இராசகுமார், டி. ஜே. என். செல்லத்துரை, எம். தெய்

(7ம் பக்கம் பார்க்க)

## விளையாட்டு வீரர்கள் விபரம்

இன்றுஆரம்பமாகும்மத்தியகல்லூரி சென்ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கட் போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்களின் விபரம் வருமாறு:

**யாழ்மத்திய கல்லூரி விளையாட்டுவீரர்**

ஜே. கனகநாயகம்: 1 இவரே கிரிகெட் கோஷ்டிக்குத் தலைவராவர். திறமையாக துடுப்பெடுத்தாடும் தன்மையும், பந்து வீசும் தன்மையும் உடைய இவர் விளையாட்டுத்துறையில் நல்ல அனுபவமுடையவர். இவர் அகில யாழ்ப்பாணக் கோஷ்டிக்கு கடந்தவருடங்களில் விளையாடியவர். கல்லூரிக் கோஷ்டியில் 3 வருடங்களாக தொடர்ந்து விளையாடுகின்றார்.

2 ரி. தர்மராஜா: இவரே இக்கோஷ்டிக்கு உப தலைவராவர். தொடக்கப் பந்து வீச்சுக்காரர்களில் ஒருவரான இவர் துடுப்பெடுத்தாடுவதிலும் திறமை வாய்ந்தவர். மாலிய தேவாவுடன் தனது விக்கெட்டையிழக்காகல் 85 ரன்களைப் பெற்றுக்கொடுத்தார். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைவதற்கு இவரே முக்கிய காரணம். விளையாட்டுலகில் "டான்டி" என அழைக்கப்படுமிவர் பலரது அமோக ஆதரவைப் பெற்றவர்.

3. வி. மகாலிங்கம்: 'லிங்கம்ஸ்' பரம்பரையைச் சேர்ந்த இவர் மிகத்திறமையான பந்துவீச்சுக்காரராகும். துடுப்பெடுத்தாடுவதிலும் திறமைவாய்ந்தவர். யாழ். மத்தியகல்லூரி தொடக்கப் பந்துவீச்சுக்காரரில் இவரும் ஒருவராகும். மத்திய கல்லூரியில் பல விளையாட்டுகளில் பங்குபற்றுபவர்களில் இவரும் ஒருவர்.

4. ஆர். மகேந்திரன்: கிரிக்கெட்டில் நன்ருகப் பயிற்சி பெற்ற இவரே யாழ் மத்திய கல்லூரி தொடக்க துடுப்பெடுத்தாடுபவர்களில் ஒருவர். இவர் 1959ம் ஆண்டில் இரண்டாவது கிரிக்கெட் கோஷ்டிக்குத் தலைமைதாங்கியவர்.

5. பி. என். மனேஹரன்: யாழ்மத்திய 'விக்கெட் காவலார்' ஆன இவர் தனது கடமையிற் திறமை வாய்ந்தவர். நன்ருகத் துடுப்பெடுத்தாடும் இவர் மாணவர்களின் நல்லாதரவைப் பெற்றவராவர்.

6.எம்.எஸ். எம்:- ஹரீஸ்: இந்த வருடந்தான் கல்லூரியினுள் நுழைந்த இவர், நுழைந்தவுடனேயே கிரிக்கெட் கோஷ்டியினுள் பிரவேசித்தவர், திறமையாக துடுப்பெடுத்தாடும் வல்லமையுடையவர். யாழ்ப்பாணக் கல்லூரியுடன் வெற்றியடைவதற்கு முக்கிய காரணமாக இருந்தார்.

7 எஸ. ராஜகிருஷ்ண:- இரண்டாவது வருடமாக கல்லூரிக் கோஷ்டிக்கு விளையாடும் இவர் சிறந்த பந்து பொறுக்கும் வீரர்களில் ஒருவராவார்.

8 வி.சிவபோதநாதன்:- 1961 ஆண்டு கல்லூரியின் இரண்டாவது கோஷ்டிக்குத் தலைமை தாங்கிய இவர் 'கிரிக்கெட்டில்' நல்ல அனுபவமுடையவர், துடுப்பெடுத்தாடுவதில் முன்னேறிக் கொண்டு வருகின்ருர். நல்லவிளையாட்டு வீரர்.

9 எஸ். ஸ்ரீனிவாசன்:-திறமையான பந்து வீச்சுத் துடுப்பெடுத்தாடும் தன்மையும், பந்து பொறுக்கும் தன்மை ஆகிய மூன்றையும்நன்ருகச் செய்யும் இவர் கல்லூரிக்கு இரண்டாவது வருடமாக விளையாடி வருகின்ருர், தற்போது சற்றே சுகயீனம் அடைந்திருக்கும் இவர் வெள்ளி, சனி போட்டியில் கலந்து கொள்வாரா என்பது சிறிது சந்தேகம்.

பி. எஸ்.ஏபிரகாம்:- அமைதி சாந்தம் இரண்டையும் ஒன்ருகப் பெற்ற இவர் கிரிக்கெட் உலகிலும் அப்படியான பேர் வழிதான், கல்லூரியின் தொடக்கத்தில் துடுபபெடுத்தாடுபவர்களில் இவரும் ஒருவராவர்.

11. பத்மதேவா: மூன்றுவருடமாக கிரிக்கெட் கோஷ்டிமூலட யாழ். மத்திய கல்லூரிக்கு சேவை செய்யும் இவர் சிறந்த

(7-ம் பக்கம் பார்க்க)



மத்திய கல்லூரி

இருப்பவர்கள் இடமிருந்து:- டி. பி. பத்மதேவா, ஆர். மகேந்திரன், ஜே. கனகநாயகம், (காப்டன்) டி. தருமராசா, வி. ரி. மகாலிங்கம், பி. என். மனேகரன்.

நிற்பவர்கள் இடமிருந்து :- கே. பத்மநாதன், எஸ். சச்சிதானந்தன், வி. சிவபோதிநாதன், ஈ. ஜே. சிற்றம்பலம், பி. எஸ். ஆபிரகாம், எம். எஸ். எம். ஹாரிஸ், எஸ். ஸ்ரீனிவாசன், எஸ். இராசகிருஷ்ண.

## கென்னடியின் வாழ்த்து

கொழும்பு, வியாழன்

இலங்கையின் புதிய கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றுள்ள திரு. வில்லியம் கோபல்லவாவுக்கு அமெரிக்க ஜனதிபதி கென்னடி ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். "புதிய பதவியில் எல்லா வெற்றிகளும் கிடைக்குமாக!" என்று ஜனதிபதி கென்னடி வாழ்த்தியுள்ளார்.

## எம். பி. யின் நியமனபத்திரம் நிராகரிப்பு!

கொழும்பு, வியாழன்

ஹக்மனை வலக்கட கிராமசபைத் தேர்தலில் 14 ம் வட்டாரத்தில் போட்டியிடுவதற்காக ஹக்மனை எம். பி. திரு. ரோய்ராஜபக்ச தாக்கல் செய்த நியமனப் பத்திரத்தைத் தேர்தல் அதிகாரி நிராகரித்துவிட்டார்.

நேரில்வந்து நியமனப் பத்திரம் தாக்கல் செய்யாமல் வேருெருவர் மூலம் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதுதான் நிராகரிக்கப்பட்டதற்கு காரணம்.

## உப்பு ஒரு படி 60 சதம்

கஹவத்தை, வியாழன்

கஹவத்தை கூட்டுறவுப் பண்டகசாலையிலும் உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப் பகுதியிலுள்ள மக்கள் ஒருபடி உப்பு அறுபதுசதம் கொடுத்து வாங்கவேண்டி யேற்பட்டுள்ளதாம்.

## "இலங்கரத்தின ஸ்பெஷல்"

### புதியரக கருவாடு

கொழும்பு, வியாழன்

'சொரண தோட்டா' என்றழைக்கப்படுவதும் இப்பொழுது "இலங்கரத்தின ஸ்பெஷல்" என்று வர்ணிக்கப்படுவதுமான புதியரக கருவாடு இப்பொழுது சுலபமாக வாங்கக்கூடியதாக இருக்கிறது.

வரண்ட பகுதிகளிலுள்ள குழத்துமீனிலிருந்து இந்தக் கருவாடு தயாரிக்கப்படுவதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது.

இந்தக் கருவாட்டிலும் இரண்டுவகையான கருவாட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஒன்று ருத்தல் ஒருரூபாய் அறுபத்தைந்துசதமாகவும், மற்றது ருத்தல் ஒருரூபாய் இருபதுசதமாகவும் விற்கப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேலே வீதி, 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாத 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.